பக்கங்கள்: 17

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 08 ஞாயிற்றுக்கிழமை 22.01.2023 கதிர் 75

### இது ரகசியம் அல்ல!

இந்த உள்ளூராட்சித் தேர்தல் எதைச் சாதிக்கிறதோ இல்லையோ தமிழர்கள் ஜனநாயக அரசியல் பாதைக்கு முற்றிலுமாகத் திரும்பி விட்டார்கள் என்பதைப் பறைசாற்றி நிற்கின்றது.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த கையோ 2

# தேர்தலை ஒத்திவைப்பதற்கான யோசனை இதுவரையும் இல்லை



## ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர்களிடம் ரணில் தெரிவிப்பு

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கமைய உள்ளூராட்சி சபைத் தேர்தலை உரிய திகதியில் நடத்த வேண்டும் என்பதுதான் எனது விருப்பம். தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் இதுவரை இல்லை.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

# 'மொட்டு' -'யானை' கூட்டணியை விரட்டியடிக்க அணிதிரளுங்கள்!

## ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார அறைகூவல்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணியை விரட்டியடிக்க வேண்டும். இதற்காக மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும்.

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு - மாளிகாவத்தையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்புக்கு முரணாகச் 2




## கொழும்பில் ஒருவர் சுட்டுப் படுகொலை!

கொழும்பில் நேற்று ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இராஜகிரிய புக்கமுவ வீதியில் மாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் கடை ஒன்றுக்குள் நுழைந்து இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 56 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

# கடத்த தயார் நிலையில் இருந்த 306 சோடி பாதணிகள் சிக்கின

## தனுஸ்கோடி அருகே நேற்றிரவு சம்பவம்





யாழ்ப்பாணம், ஜன.22

இலங்கைக்கு கடத்தும் நோக்கில் தமிழகம் தனுஸ்கோடி கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு பாதணிகளை தமிழகப் பொலிசார் மீட்டுள்ளனர்.

தமிழகம் இராமேஸ்வரம் மாவட்டம் தனுஸ்கோடி கடற்கரையில் நேற்று இரவு 7.30 மணியளவில் பொலிசார் 2

## கிளிநொச்சி மாவட்டத்தில் 29 வேட்புமனுக்கள் ஏற்பு

யாழ்ப்பாணம், ஜன.22

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 03 உள்ளூராட்சி சபைகளிற்கும் 31 வேட்பு மனுக்கள் தாக்கள் செய்யப்பட்ட நிலையில் 2 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரான திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதற்கமைய கரைச்சி பிரதேச சபையில் 11 அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும் வேடபுமனுத் தாக்கல் செய்திருந்தன. அவை அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பூநகரி பிரதேச சபைக்காக 7 அரசியல் கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்தன. 2

## யாழ். மாவட்டத்தில் 5 சபைகளில் மான் கூட்டணி போட்டியில்லை

யாழ்ப்பாணம், ஜன.22

தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி (மான் சின்னம்) யாழ். மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடவில்லை.

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைகளிற்கான தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் சி.வி.விக்னேஸ்வரன் 2

## யாழ். மாவட்டத்தில் நேற்று 7 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.21

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்காக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 17 சபைகளிலும் போட்டியிடுவதற்கு 157 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றில் 7 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரான அ. சிவபாதசுந்தரன் அறிவித்தார்.

01. யாழ்ப்பாணம் 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

டு யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும் வவுனியா நகர சபைக்கும் தேர்தல் அறிவிக்கப்பட்டது. போட்டியிடுவதற்குக் கட்சிகள் இருந்த அளவிற்கு வேட்பாளர்கள் இருக்கவில்லை. சில கட்சிகளில் போட்டியிடுவதற்கு எவருமே முன்வரவில்லை. போட்டியிட முன்வந்த இளைஞர்களில் பலரும், அதைக் காட்டிப் பின்னாளில் மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம் கேட்கலாம் என்கிற "பக்கா பிளான்"னுடன் பட்டியலில் சேர்க்கப் பெயர் கொடுத்தார்கள். அத்தோடு சரி தேர்தல் களத்தில் அவர்களை மருந்துக்கும்கூடக் காணக் கிடைத்ததில்லை.

அதற்கு அடுத்தடுத்து வந்த உள்ளூராட்சித் தேர்தல்களிலும்கூட இந்த நிலையில் அவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. என்னுடைய ஞாபகங்கள் சரி என்றால் வேட்பாளர்களைத் தேடி பத்திரிகையில் விளம்பரம் கொடுத்த கட்சியெல்லாம் அப்போது இருந்தது. போதிய வேட்பாளர்கள் இல்லை என்பதால் சபைகளுக்கு வேட்புமனு தாக்கல் செய்யாத கட்சிகளும் கூட இருந்தன.

ஆனால், நடக்க இருக்கும் தேர்தலில் நிலமை அப்படியில்லை. வேட்பாளர்கள் நிரம்பி வழிகிறார்கள். யாருக்கு கொடுப்பது யாரை விடுவது என்று தெரியாமல் கட்சிகள் முழி பிதுங்கி நிற்கின்றன. இத்தனைக்கும் அன்று தேர்தலில் போட்டியிட முன்வந்த கட்சிகளைவிட இன்று கட்சிகள் பல்கிப் பெருகிவிட்டன. சுயேச்சைகளும்கூடத் தாராளமாகக் களமிறங்கத் தொடங்கிவிட்டன.

அன்றைக்குதமிழ்த்தேசியக்கூட்டமைப்பாக ஒரே அணியாகப் போட்டியிட்ட தரப்பே இன்றைக்குக் குறைந்தது 4 அணிகளாகப் பிரிந்து கேட்கின்றன. ஆனாலும் வேட்பாளர்களுக்கு இடமில்லை. இவர் அவரின் ஆள், அவர் இவரின் ஆள் என்று முகம் பார்த்து "அண்டர் கட்" வேலைகள் தாராளமாகத் தொடர்கின்றன. அதை எதிர்த்து விடுகிறேனா பார் என சுயேச்சையாகக் களம் குதிப்போரும் உள்ளனர்.

போருக்குப்பின்னர் முதல்தடவையாகத் தமிழ் அரசுக் கட்சி தனித்து இந்தத் தேர்தலைச் சந்திக்கிறது. இதுவரைக்கும் கூட்டமைப்பு என்கிற பெயரில் அதனோடு ஒட்டிக்கொண்டிருந்த புளொட், ரெலோ போன்றன பிரிந்து தனித்துப் போய் குத்துவிளக்கில் கேட்டப்பதால் நிம்மதியாகத் தேர்தலை அந்தக் கட்சி எதிர்கொள்ளும் என்று பார்த்தால் அப்படியெல்லாம் நிம்மதியாக இருந்துவிட முடியாது என்கிறது அதன் செயற்பாடுகள்.

சனி புகுந்த இடம் விளங்காது என்பதைப் போல கட்சித் தலைவராக மாவையர் இருக்கும் வரை கட்சி உருப்படப்போவதில்லை என்பதை இந்தத் தேர்தலும் நிரூபித்திருக்கிறது. கட்சியின் வேட்புமனுக்கள் ஒன்றிரண்டு இடங்களில் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான காரணம் என்ன என்று பார்த்தால் கட்சிப் பெயரை ஒழுங்காகச் சரியாக எழுதவில்லை என்பதுதான். கட்சியின் பெயரை எழுதக்கூடத் தெரியாதவர்களை எல்லாமா தேர்தலில் போட்டியிட வைப்பார்கள் என்று நீங்கள் முணுமுணுப்பீர்கள். ஆனால் பிரச்சினை வேட்பாளர்களில் இல்லை. கட்சியிலும் அதன் தலைமையிலும்தான்.

தேர்தல் திணைக்களத்தில் பதியப்பட்ட கட்சியின் பெயர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி. அதாவது தமிழ் மற்றும் அரசு ஆகிய இரு சொற்களும் தனித் தனியாக எழுதப்பட்டிருக்கும். ஆனால் கட்சியின் தலைமையகமான வயோதிபர் மடம் என்று வர்ணிக்கப்படும் மார்ட்டின் ரோட் அலுவலகத்தில் உள்ள பெயர்ப் பலகையிலும் கட்சியின் கடிதத் தலைப்பிலும் தமிழரசு என்று பெயர் சேர்த்து எழுதப்பட்டிருக்கும். இந்தக் குழப்பத்தினால்தான் பல சமயங்களில் வேட்பாளர்கள் வேட்புமனுவில் கட்சிப் பெயரைத் தவறாக எழுதி வைக்கிறார்கள்.

இந்தத் தவறு இதற்கு முன்னரும் பல தடவைகள் நடந்திருக்கின்றன ஆனால் திருத்துவதற்கு இதுவரைக்கும் யாரும் முன்வரவில்லை. இந்தச்சின்னவிசயத்தைக் கூட திருத்த முடியாத தலைவர் கட்சியை வழிநடத்தி தமிழ் இனத்திற்குத் தீர்வையும் விடியலையும் வாங்கித் தருவார் என்பதை நம்ப வேண்டியிருப்பதுதான் தமிழர்களின் தலைவிதி. அதைத் தலைவிதி என்று நான் சொல்லக் காரணம் உண்டு.

இது அவரோடு மட்டும் முடிந்துவிடாது. அடுத்து ''வாரிசு''ம் களத்தில் குதித்து விளையாடுவதால் தமிழர்களுக்கு அது தலைவிதிதான். கட்சிக்குள் அந்த வாரிசுக்கு இடம் பிடித்துத்தரும் முயற்சி உள்ளூராட்சித் தேர்தல் களத்தையும் சூடாக்கியிருக்கிறது. வலி. வடக்கு உள்ளூராட்சி சபையில் இரண்டு தடவைகள் தலைவராக இருந்தவர் சுகிர்தன். கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் இதுவரை நேர்த்தியாக இயங்கிய சபைகளில் வலி. வடக்கிற்கு முன்னணி இடம் உண்டு. அப்படியிருந்தும் இந்தத் தடவை சுகிர்தனையும் அவரோடு சேர்ந்து இன்னும் மூவரையும் கழற்றிவிடுவதற்கு வாரிசுவின் உந்துதலில் முயற்சி நடந்திருக்கிறது.

பிறகு சுமந்திரன் அதற்குள் தலையிடப் போக மெல்ல வாலைச் சுருட்டிக்கொண்டு பின்வாங்கி விட்டனர் வாரிசுவும் அவர் ஆதரவுக் கோஸ்டியினரும். சுகிர்தனையும் அவரோடு மூவரையும் காய்வெட்டி விடுவதற்கு சொல்லப்பட்ட காரணங்களில் முக்கியமானது மாவையர் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கச் செய்தவர்கள் என்பது. இது நல்ல வேடிக்கைதான் போங்கள். அவரை தேர்தலில் வெல்லச் செய்தவர்கள் என்று வேண்டுமானால் யாரையாவது கையைக் காட்டலாம். தோற்கடிக்கவுமா யாராவது வேண்டும்...?

## கடத்த........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட தேடுதலின்போதே இந்தப் பாத அணிகள் மீட்கப் பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட பாத அணிகள் 3 உரப் பைகளில் பொதி செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிசார் தெரி

மீட்கப்பட்ட பாத அணிகளின் பெறுமதி இந்திய நாணயத்தில் ஒரு லட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட 306 சோடி சப்பாத்து காணப்பட்டன என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## யாழ்.மாவட்டத்தில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபைக்கு 9 கட்சிகளும் 3 சுயேச்சைக் குழுவும் வேட்புமனுத் தாக் கல் செய்த நிலையில் அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளன.

02. பருத்தித்துறை நகர சபைக்கு 08 கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளன.

03. சாவகச்சேரி நகர சபைக்கு 09 கட்சிகளும் 3 சுயேச்சை குழுக்களுமாக 12 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளன.

04. காரைநகர்ப் பிரதேச சபையில் 8 கட்சிகளும், 1 சுயேச்சைக் குழுவும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளன. இங்கே ஐ.ம.சக்தி சார்பில் தாக்கல் செய்த மனு உரிய பெண் பிரதிநிதித்துவம் இன்மையால் நிராகரிக்கப்பட்டது.

05 . வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு 10 கட்சிகளும் 2 சுயேச்சை குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளன.

06. வலி. வடக்கு பிரதேச சபைக்கு 9 கட்சிகளும் ஒரு சுயேச்சை குழுவுமாக 10 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில் அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளன.

07. வலி.தென்.மேற்கு பிரதேச சபைக்கு 8 கட்சிகள் வேற்பு மனுத் தாக்கல் செய்தனர். அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளன.

08. வலி.தெற்கு பிரதேச சபைக்கு 10 கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் ஒரு வேட்புமனு நிராகரிக்கப் பட்டு 9 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

09. பருத்தித்துறை பிரதேச சபைக்கு 8 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளன.

10. சாவகச்சேரி பிரதேச சபைக்கு 9 கட்சிகளும் 1 சுயேச்சை குழுவும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த நிலையில் 10 மனுக்களும் ஏற்கப்பட்டுள்ளன.

11. நல்லூர் பிரதேச சபையில் 8 கட்சிகளும் 1 சுயேச்சை குழுவும் என 9 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

12 வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபையில் 7 கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்தன. இதில் ஐ.ம.சக்தி வேட்பு மனு முழுமையாக நிராகரிக்கப்பட்டு ஐ.த.தே. கூட்டணியில் இருந்து 7 உறுப்பினர்களின் பெயர் நீக்கப்பட்டது.

13. நெடுந்தீவு பிரதேச சபைக்காக 7 அரசியல் கட்சிகளும் 1 சுயேச்சைக் குழுவும் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

14. வலி கிழக்கு பிரதேச சபையில் 9 கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்தன. அனைத்தும் ஏற்கப்பட்டன.

15. ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு 7 கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் ஐ.தே.கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

16. வேலணைப் பிரதேச சபைக்கு 8 கட்சிகளும் 1 சுயேச்சைக் குழுவும் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் த.ம.கூட்டணி மற்றும் ஐ.த.தே.கூட்டணி ஆகிய இரு கட்சிகளின் பட்டியலகளும் முழுமகயாக நிராகரிக்கப்பட்டது.

17. வல்வெட்டித்துறை நகர சபைக்காக 8 கட்சிகளும் 1 சுயேச்சைக் குழுவும் வேட்பு மனுத் தாக்கல் செய்தபோதும் ஐ.ம.சகதியின் வேட்பு மனு நிராகரிக்கப் பட்டது. இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட 157 மனுக்களில் 142 வேட்பு மனுக்கள் கட்சிகள் சார்பிலும் 15 வேட்பு மனுக்கள் சுயேச்சைக் குழுக்களின் சார்பிலும் தாக்கல் செய்யப் பட்டுள்ளன..

இதில் சுயேச்சைக் குழுக்களின் 15 வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன.

## கிளிநொச்சி........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் ஒரு வேடபு மனு நிராகரிக்கப் பட்டது.

பச்சிளைப்பள்ளி பிரதேச சபைக்காக 9 அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும் வேடபுமனுத் தாக்கல் செய்தன. ஓர் அரசியல் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

இதேநேரம் பச்சிளைப்பள்ளி பிரதேச சபையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் தாக்கல் செய்த வேட்பு மனுவில் வட்டாரங்களில் போட்டியிடும் 5 வேட்பாளர்களும் விகிதாசார பட்டியலில் உள்ள 8 வேட்பாளர்களும் நிராகரிக் கப்பட்டுள்ளனர். கோரப்பட்ட ஆவணங்களைச் சரியாக முன்வைக்காத காரணத்தினாலேயே அவர்கள் நிராகரிக்கப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

## தேர்தலை........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது கட்சி சில இடங்களில் தனித்தும், சில இடங்களில் கூட்டணியாகவும் போட்டியிடுவது தொடர்பில் விமர்சனங்கள் வெளிவருகின்றன. அந்த விமர்சனங்களுக்கெல்லாம் நாம் பதிலளித்து நேரத்தை வீணாக்கக்கூடாது. தேர்தல் வெற்றி தொடர்பிலேயே நாம் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

மக்கள் மத்தியில் பிரசாரங்களை உரிய வகையில் முன்னெடுங்கள். வன்முறைகள் தலைதூக்கும் செயல்களுக்கு ஆதரவு வழங்காதீர்கள்.

வன்முறையாளர்களைச் சமூகத்தில் இருந்து நாம் ஒதுக்கிவைக்க வேண்டும். ஜனநாயகவாதிகளுக்கு இந்த நாட்டில் என்றும் மதிப்பு இருக்கும் - என்றார்.

## யாழ்.மாவட்டத்தில் 5........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி போட்டியிடத் திட்டமிட்ட நிலையில் இறுதி நேரத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலேயே வேடபுமனுத் தாக்கல் செய்துள்ளது.

இதேநேரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராடசி சபைகளில் 12 சபைகளுக்கு மட்டுமே வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளது. அதிலும் வேலணைப் பிரதேச சபையின் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

நெடுந்தீவு, வடமராட்சி தெற்கு மேற்கு, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை நகரசபை மற்றும் காரைநகர் ஆகிய 5 பிரதேச சபைகளிலும் அந்தக் கட்சி போட்டியிடவில்லை.

## 'மொட்டு'........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டங்களை நடைமுறைப்படுத்துவோருக்கு எதிராக எமது ஆட்சியின் கீழ் தண்டனை வழங்கப்படும்.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தவர்க ளைக் கண்டறியுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசை வலியுறுத்தினோம். ஆனால், இதுவரை சந்தேகநபர்கள் எவரும் கைதாகவில்லை.

முடியுமானால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைபேசியை ஆராயுமாறு பொலிஸாரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

தேர்தலுக்கு நிதி வழங்குவதாக வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது நிதியைப் பெற்றுக்கொடுக்க முடியாது எனத் திறைசேரியால் தெரிவிக்க முடியாது.

தேர்தலுக்கு நிதி வழங்காமல் இருப்பது குற்றமாகும். அதற்கு 3 வருட சிறைத் தண்டனை வழங்கப்படும்.

தெரிவத்தாட்சி அதிகாரிகளைக் கட்டுப்பணம் ஏற்க வேண்டாம் என்று தெரிவித்த உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் செயலாளருக்கு எதிராகவும், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் போது உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.



# மின் உற்பத்திக்கான நிலக்கரியை கொள்வனவு செய்வதில் நெருக்கடி

மின் உற்பத்திக்கான நிலக்கரியை கொள்வனவு செய்வதற்குத் தேவையான 550 கோடி ரூபாவை பெற்றுக்கொள்வதற்கு நிதி அமைச்சு தீவிர முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

ஜனாதிபதி செயலாளர் சமன் ரத்நாயக்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோரின் தலையீட்டுடன் இதுவரையில் 200 கோடி ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு, எஞ்சிய 350 கோடி பெற்றுக்கொள்வதற்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இம்மாத இறுதிக்குள் இந்த பணத்தொகையை திரட்டி நிலக்கரியைக் கொள்வனவு செய்யாவிட்டால் பெரும் மின் விநியோக நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்று மின் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி முதல் வாரம் நிறைவடைவதற்கு முன்னர் நிலக்கரி இறக்குமதி செய்யப்படாவிட்டால் 6 மணித்தியாலங்களுக்கு தொடர்ச்சியான மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்தவேண்டியேற்படும் என்றும் மின்சாரத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. செப்ரெம்பர் வரை இந்நிலைமை நீடிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் கடுமையான நிதி நெருக்கடி நிலைமை நிலவுவதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் மழையுடனான காலநிலை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிலக்கரி இறக்குமதி செய்யப்படாவிட்டால் புத்தளத்தில் அவற்றை தரையிறக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் அனைத்தையும் தொகுத்து, நாட்டின் நிதி நிலைமை தொடர்பான அறிக்கையை நிதி அமைச்சு உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வேட்பாளர்களுக்கு பயிற்சி அவசியம்

**உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பலரும் ஆர்வம் காட்டி வருகின்றார்கள் என்பது வேட்பு மனுத் தாக்கலில் தெரிகின்றது. போட்டியிடுவதற்கு இடம் கிடைக்கவில்லை என்பதற்காக கட்சி தாவியர்கள் எண்ணிக்கை நாடாளுமன்றத் தேர்தலைவிட உள்ளூராட்சித் தேர்தலில்தான் அதிகம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத உண்மை.**

**அதிகாரங்கள் ஒரேயிடத்தில் குவிந்திருக்காமல் அதனைப் பரவலாக்குவதன் மூலம் எல்லா இடங்களுக்கும் சமமான அபிவிருத்தியும் வாய்ப்புக்களும் கிடைக்கும் என்பதற்காகத்தான் உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்பட்டன. சிறிய பகுதிகளில் அபிவிருத்தி மற்றும் நிர்வாகத்தைத் திறம்பட நடத்துவதன் மூலம் மக்களுக்கு மேம்பட்ட வாழ்வு கிடைக்கும் என்கிற எதிர்ப்பார்ப்பு இருந்தது.**

**ஆனால், பல உள்ளூராட்சி சபைகளிலும் அந்த நோக்கம் நிறைவேறுவதில்லை. அதற்குக் காரணம் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட நோக்கம் என்ன என்பதை உணராமல் கட்சி அரசியலையும் தனிநபர் கோபதாபங்களையும் முன்னுரிமைப்படுத்திச் செயற்படுவதுதான். வடக்கு கிழக்கில் தமிழர் பகுதிகளில் பல உள்ளூராட்சி மன்றங்களின் நிலைமை இதுதான் என்பது கண்கூடு. யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் அதற்கான மிகச் சமீபத்திய உதாரணம்.**

**தமக்கு மேலே இருக்கின்ற மாகாண சபை அரசியல்வாதிகளையும் நாடாளுமன்ற அரசியல்வாதிகளையும் பார்த்துப் பார்த்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் கெட்டுப்போகிறார்கள். மக்களால் தமக்கிடப்பட்ட பணியை மறந்து வேறு ஏதேதோ வேலைகளைப் பார்க்கிறார்கள். போதாதற்கு சபைகளை ஊழல் மன்றங்களாகவும் மாற்றித் தொலைக்கிறார்கள். எந்தவொரு சபையும் மக்களுக்கு திறம்படப் பணியாற்றியதாக மக்கள் மெச்சும் நிலை தமிழர் பகுதிகளில் இல்லை.**

**உறுப்பினர்கள் அப்படியிருப்பதற்கு அவர்களை மட்டும் குறைசொல்லிவிட முடியாது. அவர்களைச் சரியாக வழிநடத்தி திறம்படச் செயற்பட வைக்கவேண்டிய பொறுப்பிலிருந்து கட்சிகள் தவறிவிட்டமையும் அதற்குக் காரணம். எனவே தேர்தல் நடக்க இருக்கும் இன்னும் இரு மாதங்களுக்குள் ஒவ்வொரு கட்சியும் தமது வேட்பாளர்கள், சபைகளில் எப்படி நடந்துகொள்ளவேண்டும், எந்த விடயங்களில் கவனத்தைக் குவிக்கவேண்டும், சபைகளைத் திறம்பட நிர்வகிப்பதற்கான தலைமைத்துவப் பண்புகளை எப்படி வளர்த்துக்கொள்ள வேண்டும், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய என்னென்ன செய்யவேண்டும் போன்ற விடயங்களில் பயிற்சிகளை வழங்கவேண்டும்.**

**களப் பயிற்சிகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், துறைசார் வல்லுநர்களின் கருத்துப் பகிர்வுகள், மக்களின் கருத்துக் கேட்பு மன்றங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு உறுப்பினரையும் செம்மைப்படுத்திச் செழுமைப்படுத்த முயல வேண்டும். தேர்தல் நேரத்தில் வேட்புமனுவில் கையெழுத்திடுவதுடன் அவர்களின் பணி முடிந்துவிடுவதில்லை, மக்கள் பணி என்பது அர்ப்பணிப்புமிக்க வினைத்திறனுள்ள பணி என்பதை அவர்களுக்குப் புரியவைக்கவேண்டும். அப்போதுதான் சபைகளின் நிர்வாகங்கள் குழப்பங்கள் குறைந்து நிறைவானவையாக, மக்களுக்குப் பயனுள்ளவையாக இருக்கும்.**

# அரபு நாடு ஒன்றில் இலங்கையருக்கு அதிக வேலைவாய்ப்பு உத்தரவாதம்!

## அமைச்சர் மனுஷவுக்கு வழங்கப்பட்டது



கடந்தாண்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக 35 ஆயிரத்து 572 இலங்கை பணியாளர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர், இது இலங்கையில் இருந்து வெளியேறிய மொத்த பயணங்களில் 11.4 வீதம் ஆகும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்துக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, ஐக்கிய அரபு அமீரகம் தமது நாட்டுக்குள் சட்டவிரோத குடியேற்றத்தை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பின் போது ஐக்கிய அரபு அமீரகத்தின் மனிதவள அமைச்சர் அப்துல் ரஹ்மான் அப்துல்மன்னன் அல் அவார், அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம், சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு ஊழியர்களை நாட்டுக்குள் கொண்டுவருபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

தனிநபர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களின் பல்வேறு மோசடிகளின் விளைவாக விசிட் விசாவில் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு வேலை தேடி வரும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் தொடர்பில் அமைச்சர் ஐக்கிய அரபு அமீரக அமைச்சரிடம் விளக்கினார்.

விசிட் விசா மூலம் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை நாடுவதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையைச் சேர்ந்த திறமையான தொழிலாளர்களுக்கு ஐக்கிய அரபு அமீரகத்தில் அதிக வேலை வாய்ப்புகளை வழங்குமாறு அமைச்சர் விடுத்த கோரிக்கைக்கு ஐக்கிய அரபு அமீரக அமைச்சர் சாதகமாக பதிலளித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையே 2021 இல் அமைக்கப்பட்ட கூட்டு தொழில்நுட்பக் குழு, ஐக்கிய அரபு அமீரகத்துக்கு விசிட் விசா மூலம் மனித கடத்தலை எவ்வாறு தடுப்பது என்பது தொடர்பாக தொழில்நுட்ப விவரங்களைத் தொடர்ந்து கலந்துரையாடுகிறது. இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் தகுதிகளை அங்கீகரிக்கும் வகையில் இரு நாடுகளின் தகுதிக் கட்டமைப்பை வரைபடமாக்குவதன் மூலம் ஒரு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கடந்தாண்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக 35,572 இலங்கை பணியாளர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர், இது இலங்கையில் இருந்து வெளியேறிய மொத்த பயணங்களில் 11.4 வீதம் ஆகும். இது 2021 உடன் ஒப்பிடும்போது 2022 இல் 27 சதவீதம் அதிகமாகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் ஆணைக்குழுவின் கலந்துரையாடலில் கலந்துகொள்ளாத பாதுகாப்புச் செயலாளர்!



உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்னவுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்த போதிலும், அவர் ஆணைக்குழுவிற்கு பிரசன்னமாகியிருக்கவில்லை. கடந்த புதன்கிழமை ஆணைக் குழுவிற்கு வருகை தருமாறு பாதுகாப்புச் செயலாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பொலிஸ்மா அதிபரை அழைத்து கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டதால், பாதுகாப்பு செயலாளர் இதில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு இவ்வாறு செயலாளர்களை அழைத்து கலந்துரையாடுவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இல்லை என்று அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் ஆணைக்குழுவிற்குச் சென்று உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடியுள்ளமையால் பாதுகாப்பு செயலாளர் அதில் பங்குபற்றவில்லை என்று தெரியவருகிறது.

தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் அறிவிப்பதற்கு முன்னர் உரிய தரப்பினருடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருக்க வேண்டும்.

எனினும் தேர்தலுக்கான அறிவித்தலை விடுத்த பின்னர் இவ்வாறு கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்துள்ளமையே இந்த நெருக்கடிக்கான காரணம் என்று உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புக்கு உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவுவதாக பொலிஸ் மா அதிபர் ஏற்கனவே தெரிவித்திருந்ததுடன், எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு தம்மிடம் பணம் இல்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதோடு, ஆணைக்குழுவின் பிளவு தெளிவாகத் தென்படுவதாகவும் அதன் உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் வெள்ளிக்கிழமையுடனும், வேட்புமனு தாக்கல் நேற்றுடனும் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தமிழ்த் தேசியப் பேரவையினரின் ஏற்பாட்டில் போதைப்பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கு!

தமிழ்த் தேசிய பேரவையின் ஏற்பாட்டில் போதைப்பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் நேற்று (சனிக்கிழமை) இந்தக் கருத்தரங்குஈடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கில், மதகுருமார், சட்டத்தரணிகள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்டத்தில் பாண் விலை குறைப்பு!

யாழ். மாவட்டத்தில் 450 கிராம் நிறையுடைய பாண் ஒன்றின் விலை 10 ரூபாயால் குறைக்கப்படவுள்ளது.

இதன்படி இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் இந்தவிலை குறைப்பு அமுலுக்கு வரும் என யாழ்.மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் க.குணரட்ணம் அறிவித் துள்ளார்.

இனிமேல் ஒரு இறாத்தல் பாண் 180 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

# வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி சவூதி அரேபியாவுக்கு விஜயம்!



வெளிவிகார அமைச்சர்அலிசப்ரிசவூதிஅரேபியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை அவர் அங்கு தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

,தேவேளை அமைச்சர் அலி சப்ரி சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் ,ளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் அல் சௌதின் அழைப்பின் பேரில் சவூதி அரேபியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விஜயத்தின் போது ,ருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளதோடு,ஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, வளைகுடா ஒத்துழைப்பு பேரவை மற்றும் மக்கா மற்றும் மதீனா ஆளுநர்களையும் அமைச்சர் சந்திக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய மக்கள் சக்தியினர் கிளிநொச்சியில் வேட்பு மனு

ஐக்கிய மக்கள் சக்தி கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச சபைகளுக்கு போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் செய்துள்ளது.

நேற்று (சனிக்கிழமை) உமாச்சந்திரா பிரகாஸ் தலைமையில் கிளிநொச்சி தேர்தல் அலுவலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

குறித்த வேட்புமனுவை தாக்கல் செய்தன் பின்னர் உமாச்சந்திரா பிரகாஸ் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்....

*(11ஆம் பக்கத் தொடர்ச்சி)*

இக் கட்சியின் ஸ்தாபகரான தந்தை செல்வாவின் சாத்வீகம்; பொருந்திய, நேர்மை இயல்பின் மீது தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட ஈர்ப்பு இன்னும் குறையாமல் இருப்பது இக் கட்சிக்கான முதல் பலம்;.

பின்னாளில், தமிழரசுக்கட்சியின் சார்பில் வெற்றி பெற்று எதிர்க்கட்சித் தலைவராய் இருந்த அமிர்தலிங்கம் அவர்களின் ஆளுமை, இன்றும் பலரால் மறக்கப்படாமல் இருப்பதும் இக் கட்சிக்குப் பலம் சேர்க்கும் இன்னொரு காரணி.

இன்றைக்கும் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிப் பேசவிரும்பும் உள்ளூர் - உலக சக்திகள், இக்கட்சியை மையப்படுத்தியே இயங்கி வருகின்றன. இதனால் ஏற்பட்டிருக்கும் மதிப்பும் இக் கட்சிக்கான பலமாய் மாற வாய்ப்பிருக்கிறது.

தற்போது ஏதோ விதத்தில் மக்கள் மனதில் மதிப்புடன் பதிவாகியிருக்கும் சுமந்திரன், சிறீதரன், சாணக்கியன் போன்றோரின் இருப்பும்; இக்கட்சியைப் பலப்படுத்தவே செய்யும் என்பதில் ஐயமில்;லை.

இவை எல்லாம் தமிழரசுச் கட்சிக்கான 'பிளஸ் பொயின்ற்கள்'.

'மைனஸ் பொயின்ற்'களும் இல்லாமல் இல்லை.

தமிழரசுக்கட்சியின் இன்றைய தலைவரான 'மாவை' அவர்களின் உறுதிப்பாடில்லாத தன்மை அதில் முக்கியமான ஒன்று. கடந்த காலங்களில் தேர்தலில் தோற்று மக்கள் செல்வாக்கு இழந்தவர் அவர். அதுமட்டுமல்லாமல் அண்மைக் காலங்களில் மாற்றணியினர் தனிப்பாதை எடுக்க முயன்ற போதெல்லாம், கட்சியின் அபிப்பிராயம் பெறாமல், தான் தனித்துப் போய் அவர்கள் கூட்டங்களில் தேவையற்றுப் பிரசன்னமானார். இன்று அவர் நம்பிய கட்சிகள் தனித்துப் போனதும்; அங்கும் இல்லாமல் இங்கும்; இல்லாமல் தத்தளித்து நிற்கிறார். இவரது தலைமை, கட்சியை எவ்வளவு தூரம் பலப்படுத்தும் என்பது கேள்வியாகவே இருக்கிறது. இது ஒன்று.

இது தவிர கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் கூட, தமக்குள் தாம் முரண்பட்டு 'சந்தைச் சண்டை' போல மக்கள் அரங்குகளில் ஒருவருக்கொருவர் வெறுப்பறிக்கைகள் விட்டுச் செய்துவரும் கூத்துக்கள் இன்னொரு புறம்; இன்றும்; வேடிக்கையாய்த் தொடர்கிறது. இது மற்றொன்று.

ஆனாலும் இனப்பிரச்சினையில் நிதானமான ஓர் சக்தியாய்த் தன்னை நிலை நிறுத்;தியிருக்கும்; சுமந்திரனின் இருப்பு, கிளிநொச்சியைத் தனது கைவயப்படுத்தி மக்கள் சக்தியால் தன் பலங்காட்டி நிற்கும் சிறீதரனின் இருப்பு, அண்மையில் வந்தாலும் பாராளுமன்றத்தில் தனது மும்மொழித்திறமையாலும், துணிந்த வாதங்களாலும் உலகளாவித் தன்னைப் பதிவு செய்திருக்கின்ற சாணக்கியனின் இருப்பு என்பவற்றோடு....

ஆயிரம் குறைகள் இருந்தாலும் முதுமையிலும், நிதானம், எதிராளிகளை எதிர்கொள்ளும் அறிவுப்பலம் என்பவற்றைக் கொண்டு, இன்றைக்கும் இயங்கிவரும் மூத்த தமிழ்த் தலைவரான சம்பந்தரின் இருப்பு என்பதும் இன்றைய நிலையில் தமிழரசுக் கட்சியைப் பலம்; செய்து நிற்கும்; ஆற்றல்கள்.

இடுப்பில் தேவையில்லாமல் செருகி வைத்திருந்த, 'வெற்று'இலைப்பைகளைக் கழற்றி எறிந்துவிட்டு, தேர்தலில் தனித்து முகம்கொடுக்கும், இவர்களுக்கான ஆதரவு வழக்கத்தைவிடப் பெருக வாய்ப்பிருக்கிறது.

மேற்சொன்னவை எனது ஊகங்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தேர்தல் வெற்றிகளை நிச்சயிக்கும் விடயத்தில், வாக்களிக்கப் போகும்; தமிழ்மக்களின் மனநிலையும் முக்கிய இடம் பிடிக்கப்போவது உண்மை. நம் வாக்காளர்கள், தாயகத்திற்காகத் தாம்; எந்தத்; தியாகமும் செய்யத் தயாராக இல்லாமல் இருந்துகொண்டு, தியாகம் பற்றி அதிகம் பேசும் கட்சிகளைக் கண்மூடித் தனமாய் ஆதரிப்பவர்கள். அவர்கள் மனநிலையில் யார் உயர்ந்தவர்களாய்த்; தெரியப்போகிறார்கள் என்பதை எவராலும் நிச்சயப்படுத்திச் சொல்லமுடியாது. இதுவரை காலமும் இந்தப் புண்ணியவான்கள், பலதரம் பிழைகளைச் சரியாக்கி இருக்கிறார்கள். சரிகளைப் பிழையாக்கி இருக்கிறார்கள். இம்முறை இவர்கள் மனதில் சரியாகப் பதியப்போவது எக்கட்சி என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்! பொறுத்;திருந்து பார்ப்போம்.

**சல்லடையாரின் சலிப்பு** * வாரிதியார் என்னதான் சொல்லட்டும்;? விதிஙீவிட்டால்த்தான்எங்கட இனம்உயருமுங்கோ!

**1. உரலார் கேள்வி:-**

புதிதாக அமைக்கப்பட்டுள்ள கூட்டமைப்புக் கட்சிக்குள் இருந்து, முன்னாள் முதலமைச்சர் வெளியேறியதால் அக் கட்சிக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா?

**உலக்கையார் பதில்:-**

இதுநாள் வரைக்கும் தமிழ் மக்களுக்காகத் தியாகம் ஏதும் செய்யாத அவரை, புதிய கூட்டமைப்புக் கட்சிக்குள் இழுக்க நினைத்தது, பழைய போராளிக் குழுக்களின் கட்சிகள் செய்த பெருங்குற்றம் என்றே நினைக்கிறேன். அவர்களை விட்டு முதலமைச்சர் தானாக வெளியேறியது நல்லதுதான். ஆனால் இத்தகைய சுயநலம் கொண்ட ஒருவரை, தங்களுக்குள் வைத்துக் கொள்ள நினைத்த இவர்கள் மீதும், சுயநலச்சாயல் படிந்துவிட்டது மறுக்கமுடியாத உண்மை. பாம்பு வெளியேறிவிட்டாலும் புற்றைக் காணுகிறபொழுது பயம் ஏற்படுவது தவிர்க்க முடியாத விடயமே.

**சல்லடையாரின் சலிப்பு** * என்னத்தைச் சொல்லுறதுங்கோ. இதத்தான் லாபத்திலும் ஏற்படுகிற நட்டம் என்கிறதாக்கும்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM PER CHARGE*
FAAST-F2T
80-85 KM PER CHARGE*
FREEDOM
70-75 KM PER CHARGE*
Rs.550,000/- Upwards
Available Colors :
conditions apply*
India's fastest growing EV brand
2 YEARS WARRANTY*
3 FREE SERVICE*
*Range varies from mode to mode selected.
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 02.02.2022 அன்று
சிவபதமடைந்த எங்கள்
குடும்பத்தலைவியின்
முதலாம் ஆண்டு நினைவு
நாள் 22.01.2023
(ஞாயிற்றுக்கிழமை)

அன்னை மடியில்
01.04.1939

இறைவனடியில்
02.02.2022

அமரர்

## மகாலிங்கம் - செல்லப்பாக்கியம்

(கொம்மந்தறை)

மண்ணுலகில் சீரும் சிறப்புமாய் வாழ்ந்து
விண்ணுலகம் சிறக்கச் சென்றவளே...
பூப்போன்ற உன் புன்னகை
மாறாமல் என்றும் எம்மனதில் மணக்குதம்மா...

முத்தாய் பெற்று பாராட்டி சீராட்டி
பார் புகழ உயர்த்திய தெய்வமே...
உன் நினைவலைகளுடன்
எம்மை செதுக்கி வாழ்கின்றோமம்மா.

நவ இரத்தினமாய் எம் அன்னை மடியில் தவண்டு.
பாசமாய் உன் நெஞ்சில் வளர்ந்தோமே...
அந்த காலனும் பொறாமை கொண்டு
தனக்கும் வேண்டும் அந்த பாசம் என்று
உன்னை கூட்டிச் சென்றானோம்மா...

கண் குளிர, மனம் நிறைய கட்டித் தழுவி
வாயாற 'பூட்டி' என கேட்டு பரவசமடைந்தாயே.
அனைத்தும் பெற்றேன் போதும் இப்பிறவி என்று
இறைவனடி. சேவை செய்யச் சென்றவளே...

உன் ஞாபக தடங்களுடன் நகர்ந்தோமே
இவ் ஓராண்டு!!!

செல்வ பவனம், மயிலியதனை,
தொண்டைமானாறு, யாழ்ப்பாணம்.

– குடும்பத்தினர் –

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page 1 English for all Sunday the 22nd of January 2023



We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com


## Read the following passage and Answer: the question that follows.



Native American Indian groups in North America lived in different cultural regions, each of which developed its own customs and traditions. A custom is the specific way in which a group of people does something. This, can include how foods are prepared, what clothing is worn, the kinds of celebrations and much more. The set of customs developed and shared by a culture over time is a tradition. A culture's customs are often determined by the natural resources found in their environment. In the Desert Southwest region, cloth weaving developed as a custom. The area has fewer large animals whose skins can be used for making clothing or blankets.

Cloth weaving, was a way of meeting the need for clothing without using animal skins. In the Eastern Woodlands area, however, hunting and fishing were daily activities. Since it was easy to get animal skins, developing skills like weaving were less important. The traditional roles of men and women in the native tribes varied as well. In hunting cultures, men were often away from home during the day to hunt animals for food. Women did many chores around the village while they were gone. In cultures where crops were grown, it was usually the men who tended them.

Folklore was an important part of all Native American cultures. They had no written language. Telling the tribe's stories orally was the way they preserved them from generation to generation so they would not be lost. The tribe used chanting, storytelling and singing as a way to remember the tribe's folklore. The stories told the tribe's history, funny adventures and accomplishments. Folklore also helped unite the people of the tribe. Religion was an important part of Native American cultures.



The celebration of the tribe's faith and worship often involved special ceremonies. Harvest ceremonies were a common way to give thanks to the tribe's gods for a good crop. Other ceremonies combined religious songs and dances with social activities. The ceremonies reinforced the people's trust in their leaders' ability to provide for their needs.

Answer the following questions based on the reading passage.

1. What is a custom?

------------------------------------------------------------------------

2. What are the ways that Native Americans told their stories?

------------------------------------------------------------------------

3. In your own words, explain the importance of folklore.

------------------------------------------------------------------------

4. Explain why some tribes developed weaving.

------------------------------------------------------------------------

5. Write the suitable word meaning for

(a) necessary duty

------------------------------------------------------------------------

(b) traditional belief (para 2)

------------------------------------------------------------------------

"I'm in for it now," muttered Kelly to herself as she saw her teacher glaring at her. The day had begun badly for Kelly and it seemed to go from bad to worse! She had been growled at in front of the whole class for being late and was not allowed to say why she was late. Then there was the Maths test! Maths, Kelly decided, was just not her best subject. At recess, the children teased her for being put on detention because she was late. Then lunch time came and she had no lunch. To top it all off, she had to deliver newspapers after school in the dark.

Kelly moaned – sometimes it was so hard to stay happy. The last of her papers had been delivered. Pushing her bicycle up the hill towards her house, she was just too tired, cold and hungry to hum a happy tune. She still had her homework to do. As she came in the door, Dad said, "Kelly, you had a visitor while you were out, a 'Mrs. Johnson'. She left this for you." Kelly raised her head and stared at her father in surprise. "Who's Mrs Johnson? I don't know any Johnsons."

"Well this letter and parcel have your name on them, so she must know you," Dad said. "What does it say?" Kelly opened the envelope and took out the letter. She read it in silence, her eyes widening in surprise and pleasure. "It's a letter of thanks, Dad. I helped a little girl called Jamie this morning on the way to school. She had a bad fall. That's why I was late for school and then got a detention for that. This is a letter from her mother to say 'thanks'. It's a really nice letter." "Wow!" exclaimed Dad as he finished reading the letter. Kelly unwrapped the small parcel. Inside the wrapping was the handkerchief she had used to bandage Jamie's knee, all cleaned and ironed. Under her hanky was a little, old–looking, black velvet box. Carefully, Kelly opened the box. Inside lay a gold chain with a heart–shaped locket. Engraved on it was the inscription, "I am special". Kelly stared at it with tears in her eyes. She lightly fingered the little golden locket. In future, she decided, "Whenever I feel 'ugly', I'll just touch this locket and remember its message…I am special."



**Answer the following questions based on the reading passage.**

1. Why was Kelly late for school that morning?

------------------------------------------------------------------------

2. Why was Kelly hungry and tired when she got home that eve ning?

------------------------------------------------------------------------

3. What was the surprise waiting for Kelly when she got home?

------------------------------------------------------------------------

4. How do you think Kelly felt as she stared at the locket?

------------------------------------------------------------------------

5. How did the heart–shaped locket help lift Kelly's spirit?

------------------------------------------------------------------------

**"konwledge isn't free. You have to pay attention"**

Few people ever took Noticeof Mr. Jimmy Tan whenever he entered a room. He was a shy, quiet and simple man who preferred to keep to himself in public. However, people who had met him would realise that he is actually a very remarkable person who had achieved many spectacular results in scientific experiments. On the other hand, Mr. Thomas Kim, a fellow scientist, was a man everyone would Noticeon the streets. He, wore bright outfits with huge flower prints, spoke with a booming voice, and his laughter could be heard from all corners of a room. In addition to the differences in their characters,

Mr. Kim and Mr. Tan were also great rivals at work in the Institutė of Future Science. On Christmas Eve, everyone left work early to celebrate the special occasion, except for Mr. Tan and Mr. Kim. They were in their laboratory analyzing the results of their latest experiments. Mr. Tan realized that something special was taking place in his experiment – the bacteria he had cultured were growing extremely quickly under high pressure and at a very low temperature. After noting down the findings in his notebook, he left the room to prepare for another round of tests. Shortly after, Mr. Kim entered. “Hey Jimmy,” Mr. Kim called out, “do you have an extra copy of the laboratory booking form?”

There was no reply, so Mr. Kim ruffled through Mr. Tan’s things. He soon found Mr. Tan’s notebook and was horrified to see that Mr. Tan had managed to make one of the most important discoveries in modern science. “Oh no, this cannot be! He will become very famous if he publishes this finding. Soon, he may even be promoted to be Head of Research and I will have to work under him! I cannot let this happen,” Mr. Kim thought to himself.,

Mr. Kim in to the deep–freeze cabinet where the Petri dish containing the – bacteria was kept He removed the dish, slotted them into his pocket, and returned to his own laboratory. Mr. Tan came back an hour later to find his notebook and the Petri dish missing He knew that Mr. Kim had taken them and went to Mr. Kim’s laboratory to confront him. When Mr. Tan opened the door to Mr. Kim’s laboratory, he found Mr. Kim lying on the floor motionless. His face was pale and his skin had turned black. The deadly bacteria had been handled improperly and had infected Mr. Kim. Mr. Tan shook his head and left.

**Answer the following questions based on the reading passage.**


1. What was Mr. Tan’s occupation?

---------------------------------------------------------------------------------

2. Which sentence tells you why Mr. Kim was someone who was easily recognised by people?

---------------------------------------------------------------------------------

3. Where did Mr. Tan and Mr. Kim work?



---------------------------------------------------------------------------------

4. Why did Mr. Tah and Mr. Kim not get along?

---------------------------------------------------------------------------------

5. What did Mr. Tan discover in the experiment he conducted on Christmas Eve?

---------------------------------------------------------------------------------



In the 1600s large farms called plantations flourished in the southern colonies of America. The soil there was rich. The warm climate created excellent conditions for successfully growing crops for profit. Two favorite crops of the times were tobacco and rice. They were later joined by indigo, a plant used to make a deep blue dye for coloring ink and cloth. Traditional family farms were relatively small. Families were large, depending on all members of the family to do the work on the farm. Often, the farm raised only enough to meet the family’s needs.

This included a small surplus to be used for the next year’s seed. In particularly good times, an abundance of any crop would be canned and preserved for the winter. There was less fresh food available in the winter. Additional small amounts might be traded with other farmers for crops of another kind. This would increase the variety of food available. Rarely would any crops be sold for profit. Running large plantation created a new problem.

The members of a single family, or even several together, were not enough people to do all the necessary work on the plantation. Land owners brought workers over from England. Often, working class people who wanted a new start in the Americas would sign a contract and become an indentured servant. Their passage on a ship from England to America was paid by the landowner. The indentured servants were given food, clothing and shelter.

They would work an agreed–upon number of years in the service of the landowner. At the end of their contracted time, they were free to leave the plantation and pursue their new lives in America. Some indentured servants were treated quite fairly. Others were treated with the same disregard as slaves. For all intents and purposes, indentured servants could be considered slaves with the hope of freedom in the future. Their time of servitude would eventually end. For the increasing number of slaves who began arriving from African and the Caribbean, there was no such promise.

Answer the following questions based on the reading passage.

1. What distinguished an indentured servant from a slave?

---------------------------------------------------------------------------------

2. Why did plantations need so many workers?

---------------------------------------------------------------------------------

3. What did indentured servants receive for their work?

---------------------------------------------------------------------------------

4. What motivation might working class people in England have had to sign a contract to work as an indentured servant?

---------------------------------------------------------------------------------

5. Find the suitable word meaning from the above passage

(a) bind as an apprentice

---------------------------------------------------------------------------------

(b) the state of being a slave

---------------------------------------------------------------------------------

காலைக்கதிர் Kalaikkathir

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




**1. உரலார் கேள்வி:-**

புதிதாக அமைத்துள்ள கூட்;டமைப்புக் கட்சிக்குள் முன்னாள் விடுதலைப் புலிகள் போராளிகளின் கட்சியான, 'ஜனநாயகப் போராளிகள் கட்சியை' சேர்ப்பதற்கு, சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மறுப்;புத் தெரிவித்து வெளிநடப்புச் செய்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-**

அவர் செய்தது நியாயம் தானே! நம் மண்ணுக்காக நடந்த உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு, தமது மதிப்புக்குரிய உயிர்களையும், அங்கங்களையும், வாழ்க்கையையும் இழந்து போனவர்கள் முதலமைச்சருடைய குடும்பத்தாரும்;, உறவினர்களும் தானே. அத்தகைய தியாகங்களைச் செய்து அரசியலுக்குள் வந்திருக்கும் முதலமைச்சருக்கு, இவர்களைச் சேர்க்கக் கூடாது என்று சொல்லுகிற உரிமைகூடவா இல்லை என்;கிறீர்கள்? இவரதும் இவரைச் சார்ந்தோரதும் தியாகத்தின் முன்னால் பழைய போராளிகள் எல்லாம் எம்மாத்திரம்?

இப்படிப் பதில் சொன்னால் உங்களுக்குத் திருப்தியா? இந்தப் பதிலை ரசிக்கவும் யாழ்;ப்பாணத்தில் ஆட்கள் சிலர் இருக்கத்தான் செய்வார்;கள். இல்லாவிட்டால், முதலமைச்சர்; பதவியை ஏற்று அதனைப் போட்;டுடைத்த பின்பும், துணிந்து மக்கள் மன்றத்திற்கு முகம்; கொடுக்க அவருக்கு எப்படித் துணிவு வரும்? யார் எதனைப் பேசுவது என்ற வரையறை இல்லாமல் போய்விட்;டது. 'கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்பது இதனைத்தான்.

**சல்லடையாரின் சலிப்பு** * எரிச்சல் எரிச்சலாய் வருது பாருங்கோ! கறையான் புத்தெடுக்கப் பாம்பு குடிகொண்ட கதை என்கிறது இதைத் தானுங்கோ.

**1. உரலார் கேள்வி:-**

தேர்தலில் நிற்கப் போகும் தமிழ்க்கட்சிகளின் வெற்றி வாய்ப்புப் பற்றிய உங்களது கணிப்பினைச் சொல்லுங்களேன்?

**உலக்கையார் பதில்:-**

நீளமாகப் பதில் சொல்லும் கட்டாயத்திற்கு என்னை ஆளாக்குகிறீர்கள். வாசகர்களுக்கு இது 'போரடித்தால்' அதற்கு நீங்களே பொறுப்பு. இனி ஒவ்வொரு கட்சிகளாய்ப் பார்;க்கலாம்.

### புதிதாய் அமைக்கப்பட்டுள்ள கூட்டமைப்புக் கட்சி

ஒட்டகம் கொட்டகையைக் கிளப்பிக் கொண்டு புறப்பட்டது போல, கூட்டமைப்புக்குள் இதுநாள்வரை ஒட்டிக்கொண்டிருந்த சித்;தார்த்தனும், அடைக்கலநாதனும் 'கூட்டமைப்பு' என்கின்ற பெயரையும் கிளப்பிக்கொண்டு போய் புதிய கூட்டினை அமைத்துள்ளனர். இவர்கள் துணிவுள்ளவர்களாய் இருந்திருந்தால் இதை எப்போதோ செய்திருக்கலாம்.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தில், துரியோதனன் விதுரனைப் பார்;த்து, 'ஐவருக்கு நெஞ்சும், எங்கள் அரண்மனைக்கு வயிறும்' கொண்டவனே! என்று கூறினாற்போல இதுநாள் வரைக்கும் இவ்விருவரும் கூட்டமைப்புக்குள் இருந்ததாய்ப்; பெயர் பண்ணினார்களே தவிர, ஒருக்காலும் அக்கட்சிக்கு இவர்கள் விசுவாசமாய் இருக்கவில்லை என்பது அனைவரும்; அறிந்த உண்மை. சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்பட அவர்கள் தயங்கியதில்லை. 'தமிழ்மக்கள்பேரவை'யை அமைத்த காலத்திலிருந்து, இவர்;களின் இந்த இயல்பு வெளிப்பட்டே நின்றது.

இப்போது தேர்தலுக்குக் கட்சிகள் தனித்தனியே முகங்கொடுக்கலாம் எனத் தமிழரசுக்கட்சி அபிப்பிராயம் சொன்னதும்;, இனி இந்தக் கொட்டகைக்குள் நமக்கு இடமில்லை என்பது நிச்சயமானதால், தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமை பேசுவதாய்ச் சொல்லி, கட்சிப் பெயரையும் கவர்ந்து இவர்கள் வெளியேறி இருக்கிறார்கள்.

புதிய கூட்டமைப்புக்குள் இணைந்திருக்கும்; கட்சிகள் எல்லாம்;, பழைய போராளிக் குழுக்களால் அமைக்கப்பட்ட கட்சிகள். இத் தகுதி இவர்களது கட்சிக்குப் பலமாகவும் அமையலாம் பலவீனமாகவும் அமையலாம். எப்படி என்று சொல்கிறேன்.

போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் கை தனித்து ஓங்கிய பிறகு, மண்ணிற்காய்ப் போராடிய ஏனைய போராளிக் குழுக்கள் மீது, ஏதோ இனத்;துரோகம் செய்த குழுக்கள் போல பழி சுமத்தப்பட்டது. 'விழுந்த மாட்டிற்குக் குறி சுடுகிற' இயல்புள்ள எங்கள் தமிழினமும், இன்றுவரை அக் கருத்தை உள்வாங்கி நிற்பதென்பது நன்றி மறந்ததான கீழ்மையின் வெளிப்பாடு.

அந்தக் காரணத்தால், ஒட்டுமொத்தப் பழைய போராளிக் குழுக்கள் மட்டும் இணைந்திருக்கக் கூடிய இந்தப் புதிய கூட்டமைப்புக்கட்சி வாக்கினை அள்ளுமா? என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது.

சிலவேளை களத்தில் நிற்கும் மற்றைய கட்சிகள் எல்லாம், அறைகளுக்குள் இருந்து இனப்போராட்டம் செய்த கட்சிகள், இந்தக் கட்சிதான் இரத்தம் சிந்தி இனப்போராட்டம் செய்தோரின் கட்சி என நினைந்து, மக்கள் இவர்களுக்கு வாக்களித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### தமிழ் மக்கள் தேசியக்கூட்டணிக் கட்சி

இது முன்னாள் முதலமைச்சர் தலைமை தாங்கும் கட்சி. இனத்திற்காக ஒரு துரும்பையும் அசைக்காமல், மற்றவர்கள் மேல் குற்றம் சொல்லிக் குற்றம் சொல்லியே, 'அறிவாளி', 'தியாகி' என்ற அபிப்பிராயத்;தைப் பெற்று, தமிழ் மக்களின் ஏமாளித்தனத்தால், பாராளுமன்றம் வரை சென்ற ஒருவர்தான் இந்தக் கட்சியின் முதுகெலும்பாய் இருக்கிறார். தனது தோற்றத்தாலும், முன்னைய நீதியரசர் பதவியாலும் மதிப்பை உண்டாக்கிக் கொண்டு, படித்த மனிதரின் கட்சி எனத் தன் கட்சிக்கு ஒரு பொய்ப் போர்வையை இவர் போர்த்தி வைத்திருக்கிறார்.

படித்த மனிதர்களுக்குரிய உண்மை, நீதி, தீர்க்கதரிசனம் என எந்த விடயமும் இல்லாமல் இவர் நடத்தும் அமைப்புக்களில், எவரும் தொடர்ந்து நிலைத்ததாய் வரலாறு இல்லை. அதுபோலவே இவரும் எந்த அமைப்பிலும் தொடர்ந்து நிலைத்திருந்ததாயும் வரலாறு இல்லை.

இன்றுகூட, இவரது கட்சியின் செயலாளர் தொடங்கி உறுப்பினர்கள் வரையிலான பலரும், இவரது சுயநலமான நிர்வாகம் பற்றி, வெளிப்பட விமர்சித்;துக் கொண்டே இருக்கிறார்கள். இன்றைய நிலையில் இவருக்காகத் தேர்தல் வேலைகளில் இறங்கிப் பாடுபடத் தொண்டர்கள் யாரும்; இருக்கமாட்டார்;கள் என்றே நினைக்கிறேன். இது இக் கட்சியின் முக்கிய பலவீனம்.

இம்முறை, முன்னாள் மேயர் மணிவண்ணன் இவரது பொறிக்குள்; தானாகப் போய்த் தலையைக் கொடுத்திருக்கிறார். அவர்; பக்கம் இருந்து ஓடித்திரிந்து உழைக்க ஒருசிலபேர் முன் வரலாம். ஆனால் தேர்தலில் நிற்கப்போகும் மற்றைய கட்சிகளோடு ஒப்பிடும் போது, இவர்களுக்கான தொண்டர் பலம் மிகக் குறைவாகவே இருக்கப் போகிறது என்பது மட்டும் நிச்சயம்.

பெரும்பாலும் இந்தத் தேர்தலோடு முன்னாள் முதலமைச்சரின் கட்சிக்கு முடிவுரை எழுதப்படலாம் என்றே தோன்றுகிறது.

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

பாராளுமன்றத்தில் ஏற்கனவே இரண்டு இருக்கைகளைப் பிடித்திருக்கிற கட்சி இது. பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்;பலம் ஆற்றும் தெளிவும் துணிவும்; மிக்க உரைகள் இக் கட்சியை ஓரளவு பலப்படுத்தியிருப்பது உண்மை. இனி வரப்போகிற தேர்தல்களில், இவற்றை மட்டும் வைத்து அக்கட்சியின் பலத்தை நாம் கணிக்க முடியாது. அப்போது அவர்களின் வெற்றிக்குப் பின்னால் வேறு பல காரணங்களும் இருந்தன.

மணிவண்ணனும், அவரைச் சார்ந்த இளைஞர்களும் கொடுத்த முழுமையான உழைப்பும் பிரச்சாரமும் என்பது அக்காரணங்களில் ஒன்று.

முன்னாள் முதலமைச்சருக்கு எதிராகத் தமிழரசுக்கட்சியால், சூது விளைவிக்கப்பட்டதாய்ச் செய்தி பரப்பப்பட்டபோது, அவர்மேல் அனுதாபம் ஏற்படுத்த இவர்கள் பெரும்பாடுபட்டனர். (இன்றைக்;கு இவர்களே அவரை அரசியற் கோமாளி என்று கிண்டல் செய்வது வேறு விடயம்). அந்நேரத்தில், தங்கள் கட்சிக்கு வருமாறு இவர்களால் அவருக்கு அழைப்பும் விடப்பட்டது. இக் கட்;சியைச் சார்ந்தோர் முதலமைச்சர் பக்கம்; நின்று செய்த பிரச்சாரம்; அந்நேரத்தில் கூட்டமைப்புக்கு எதிரான வாக்குகளை இவர்;கள் பக்கம் திரட்டியிருந்தது. இது இவர்களின் பழைய வெற்றிக்கான மற்றொரு காரணம் ஆயிற்று.

தமிழரசுக்கட்சியின் சில செயற்பாடுகளால் அவர்களின் மேல்; விழுந்திருந்த மக்களின் எதிர்ப்புணர்ச்சி, அவர்களுக்கான மாற்று அணி ஒன்றினைத் தேடச் செய்தது. இதுவும் இவர்களின் வெற்றிக்கு வழிவகுத்த இன்னொரு காரணம் எனலாம்.

இவையெல்லாம் சேர்ந்து தான் அப்போது இக்கட்சியைப் பாராளுமன்றத்திற்குள் அனுப்பி வைத்தது.

இன்று முதலமைச்சரை விட்டும்;, மற்றவர்களை விட்டும் இவர்கள் தனித்;து இயங்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். மணிவண்ணன் குழுவினரின் ஆதரவு நீங்கியது மட்டுமல்லாமல் அவர்களது எதிர்ப்பிற்கும் இவர்கள் ஆளாகி நிற்கிறார்கள்.

நடைமுறைக்குப் பொருந்தாத இவர்களது தமிழினம் பற்றிய கொள்கை, இவர்களிடமிருந்து மக்களை இன்று விலகிச் செல்லப் பண்ணியிருக்கிறது. இக் கட்சியைப் பதிவு செய்வதில் கஜேந்திரகுமார்; காட்டிவரும் தயக்கத்தால், இவர் தனது குடும்பக் கட்சியான தமிழ் காங்கிரஸ் கட்சியை வளர்க்கவே இக்கட்சியைப் பயன்படுத்த முயல்கிறார் என்று இவரது கட்;சிக்குள்ளேயே ஏற்பட்டிருக்கக் கூடிய மனக்கசப்பும் இவர்களின் பின்னடைவுக்குக் காரணமாய் அமைதல் கூடும்.

இவை எல்லாவற்றையும்; விட முக்கியமாய் ஈழத்;தமிழர் பிரச்சினையில் தவிர்க்க முடியாத சக்தியாக இருக்கும்; இந்தியாவின் மேல் இவர்கள் காட்டிவரும் எதிர்ப்புணர்ச்சி, நிச்சயம் இவர்களது வெற்றிக்கனி நோக்கிய பயணத்திற்கு இடையூறு செய்யும்.

இவையெல்லாம் சேர்ந்து, பெரும்பாலும் இக்கட்சிக்கான அன்றைய செல்வாக்கை இல்லாமல் செய்துவிடும்; என்றே நம்புகிறேன்.

### தமிழரசுக் கட்சி


பலதசாப்தங்;களாகத் தமிழர் பிரச்சினையைக் கையாண்டு வரும் கட்சி என்கின்ற தகுதியோடு இக்கட்சி தேர்தல் களத்தில் இம் முறை தனித்துக் குதிக்கப்போகிறது.

(5ஆம் பக்கம் பார்க்க)

# சுகநல நிலையத்துடனான உறவு - ஒரு அனுபவப் பகிர்வு - 03

**இலக்கம் 769, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் திருச்சிலுவைக் கன்னியர் சபையினரின் திருச்சிலுவை சுகநல நிலையம் பணியில் 40 ஆண்டுகளை 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொட்டு நிற்கிறது. நிலையத்தினருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு றூபி ஆண்டு என்று அழைக்கப்படும் 40ஆவது ஆண்டு நிறைவில் இவர்கள் வெளியிட்ட சுகநலம் என்ற சஞ்சிகையில் இருந்து சில முக்கிய ஆக்கங்களை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் வாசக அன்பு நெஞ்சங்களுக்குத் தருகிறோம்.**

**- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -**
**(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம். ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம். இயக்குனர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர், யாழ்ப்பாணம்)**




2010ஆம் ஆண்டு இலண்டனில் ஆய்வுக் கல்வியின் போது, எனது ஊடக கலாநிதிப்பட்ட ஆய்வுக் கல்வி இலண்டனில் நிறைவுறும் நிலையில் ஒரு ஞாயிறு தினம் இலண்டன் செபீல்ட் கலாம் பல்கலைக்கழகத்தில் அருட்சகோதரி ஆன் லீ அவர்களின் பொறுப்பில் இயங்கிய வந்த கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் வாராந்த ஞாயிறு திருப்பலி நிறைவேற்றிய பின்னர் மாலை எட்டு மணியளவில் இலண்டன் செபில்ட் கலாம் பல்கலைக்கழகத்தின் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் இருக்கும் போதே எனக்குதொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

அழைப்பை எடுத்தவர் என்னோடு துணையாக இருந்த ஸ்ரனிஸ்லோஸ் ஞானராஜ். அவர் என்னை பொதுவாக அழைக்கும் நேரம் அதுவல்ல. எனவே நான் பயத்துடன் கோள் எடுத்தேன். அம்மா சரியான வருத்தமாகியுள்ளார் என்றார்.

திருச்சிலுவை சுகநல நிலைத்திற்கு அறிவித்தீரா எனக்கேட்டேன். ஓம் என்றார். எனது மனம் சற்று அமைதி பெற்றது. ஆனால் அம்மாவிற்கு 86 வயதாகி விட்டது என்பது என் மனதை உறுத்திக் கொண்டிருந்தது.

திருச்சிலுவை சுகநல நிலைத்தில் இருந்து சில கன்னியர்கள் உடன் வந்துள்ளனர். அம்மாவைப் பார்த்து விட்டு பாதர் ரூபன் மரியாம்பிள்ளையை உடன் இலண்டனில் இருந்து இலங்கைக்கு வரச் சொல்லுங்கள் என்று சொல்லி விட்டுச் சென்றுள்ளனர்.

என்னை வரச்சொல்லிய செய்தி எனக்கு வர முன்னரேயே இலண்டனில் இருக்கும் எனது சகோதரிகள் மூலம் அம்மா இறந்து விட்ட செய்தியை அறிந்தேன்.

**2013 சுகநல நிலையப்பணி பற்றிய வீடியோ**

திருச்சிலுவைக்; கன்னியர் சபையின் மாகாண முதல்வராக அருட்சகோதரி விக்றறீன் ஜேம்ஸ் அவர்கள் பணியாற்றிய காலத்தில் சபையின் 150ஆவது நிறைவில் நான் எல்.பி.என். கேபிள் சேவை மூலமாக நடத்தி வந்த ரீ.சி.என்.எல். தொலைக்காட்சி வழி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளின் உதவியுடன் வீடீயோ பதிவு ஒன்றை மேற்கொண்டு அதன் இறுவட்டுக்களை அவர்களுக்கு வழுங்கினேன்.

அது திருச்சிலுவைக் கன்னியரின் வாழ்வும் பணியும் பற்றியதாக அமைந்திருந்தது. ரீ.சி.என்.எல். தொலைக்காட்சியிலும் அது ஒளிபரப்பப்பட்டது.

2019 திருச்சிலுவை சுகநல நிலையப்பணி பற்றிய ஊடகப் பட்டதாரிக் களப்பயிற்சி வீடியோ

2001ஆம் ஆண்டு நான் நிறுவிய பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்; 2012ஆம் ஆண்டு இந்தியா கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் இணைப்புப் பெற்று ஊடகப் பட்டதாரிகளை உருவாக்கும் பணியை ஆரம்பித்தது.

2012 – 2020 ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற இப்பணியின் போது ஊடகப் பட்டதாரிப் படிப்பை மேற்கொண்ட விவேகாநந் விபுலாநந் (பதிவு இலக்கம் 15.பி.வி.சி.1192) என்ற பட்டதாரி மாணவனின் களப்பயிற்சிக்கு திருச்சிலுவைக் கன்னியரின் சுகநல நிலையத்தின் பணிகளை ஆய்வு செய்து விடியோப் பதிவாக எடுக்கும்படி வழிகாட்டி உதவினேன்.

விவேகாநந் விபுலாநந் பல நேர்காணல்கள் படப்பிடிப்புகளுடன் தற்போதைய யாழ்ப்பாணம் சுகநல நிலைய டாக்டர் சிஸ்ரர் பப்ரிஸ்ரா பத்திநாதர் அவர்களிடமும் நேர்காணல் மேற்கொண்டு அப்பணியைச் செய்திருந்தார்.

இந்தியா கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகம் இவரின் கல்வி மற்றும் களவேலைக்காக முதல்த்தர சித்தியை இவருக்கு வழங்கியது. இவரின் களவேலைதான் இவருக்கு முதல்த்தர சித்தியை வழங்கியது என்பதுடன் இவர் மட்டுமே எமது நிலைய ஊடகப் பட்டப்படிப்பில் முதல் தரசித்தியைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**2019ஆம் ஆண்டு - மீண்டுமொரு அனுபவம்**

2019ஆம் ஆண்டு எனது காலில் ஏற்பட்ட புண் காரணமாக திருச்சிலுவை சுகநல நிலையத்திற்குச் சென்றேன்.

அப்போது டாக்டர் சிஸ்ரர் பப்ரிஸ்ரா பத்திநாதர் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

உங்களுக்கு நீரழிவு நோய் உள்ளது எனவே புண் மாற நீண்ட காலம் எடுக்கும். வைத்தியசாலையில் தங்கி இருங்கள். விரைவாகக் குணமாக்கி விடுகிறேன் என்று சொன்னார்.

நான் ஒருபோதும் ஒரு வைத்தியசாலையிலும் இருந்ததில்லை. ஒவ்வொரு நாளும் வந்து மருந்து கட்டுகிறேன் என்று சொல்லி ஒருவாறு சமாளித்து வந்து விட்டேன்.




இவ்வாறுதான் போன தடவை 1984ஆம் ஆண்டு டாக்டர் சிஸ்ரர் இமாக்குளேற் யோசவ் அவர்களிடமும் கதைத்து வைத்தியசாலையில் தங்காமல் சென்றதை நினைத்துக் கொண்டேன். ஆனால் ஒரு சில தினங்களில் நான் விட்ட பிழையை உணர்தேன்.


அடுத்த தடவை நான் வைத்தியசாலைக்குச் சென்றபோது டாக்டர் சிஸ்ரர் நான் ஆயரிடம் அறிவிக்கப் போகிறேன். இங்கு தங்கி நின்று வைத்தியம் செய்யாவிட்டால் கால் பெரு விரல் கழற்றப்படவேண்டும் என்று சொன்னார்.

டொக்டர் சிஸரர் இவ்வாறு சொல்லுவதற்கு முன்னரே நான் வைத்தியசாலையில் தங்கவேண்டியது கட்டாயம் என்பதை உணர்ந்திருந்தேன். என்னை திருச்சிலுவை சுகநல நிலையத்தில் அனுமதித்தனர்.

எனது அப்பா தங்கி இருந்து இறந்த அதே அறையில்தான் என்னை அனுமதித்தனர். ஒரு நாள் கடந்த பின்னரே எனது அப்பா இருந்து இறந்த அறை அது தான் என்பதை உணர்ந்தேன். விடயத்தைச் சொன்னவுடன் எனது பழைய நினைவு எனக்கு உளவியல் ரீதியாகப் பயத்தை ஏற்படுத்தும் என்று மேல்மாடி அறை ஒன்றிற்கு என்னை மாற்றினர்.

சுமார் 15 நாட்கள் வைத்தியசாலையில் தங்கி இருந்தேன். வைத்திய சாலையில் இருந்து வெளியேறிய பின்னரும் பல மாதங்கள் வைத்திய பராமரிப்புடனும் நடப்பதற்கு ஊன்று கோலுடனும் நடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

திருச்சிலுவை கன்னியரின் சுகநல பணி நிலையத்துடன் எனக்கு ஏற்பட்ட இந்த அனுபவப் பகிர்வுகளை நன்றியுடன் அவர்களின் பணியின் 40ஆவது றூபி ஆண்டு மலரில் பதிவிடுகிறேன்.



சிறுகதை

பிரம்மியா சண்முகராஜா

# மெல்லத் திறந்தது கனவு

விரல்கள் அந்தத் தளிரைக்கிள்ளி உள்ளங்கைக்குள் சேர்த்து தோளோடு ஊஞ்சலாடிக் கொண்டிருக்கும் கூடைக்குள் எறும்பு தீனி சேர்ப்பதாய் சேர்த்துக் கொண்டிருந்தது. கத்தரிக்கப்பட்ட தடிகளில் பசேல் என தளைத்திருக்கும் பாசிநிறத்து இளங்குருத்து என்னை தொடு என்னை எடு என அவள் மெத்தை விரல்கள் தடவிக்கொள்ள பரப்பிக் கிடந்தது. மலைகளையும் மரங்களையும் மூடி மூட்டமிடும் பனி தாரைகள் அணைந்த காட்டுத்தியின் புகை மூடி ஆவியானது போல் வெண்மை கக்கிக் கொண்டிருந்தது. பாதைகள் பாதியிலே நின்று விடுவது போன்று காட்சியில் தப்பிதம் தோன்றிவிடும் தரையமைப்பு. இந்த பகுதியில் சூரியனுக்கு வேலை கொஞ்சம் குறைவுதான் அவ்வப்போது எட்டிப் பார்த்து பின்பு பனித்தார்களின் பின் பதுங்கிக் கொள்வதுமாய் பம்மாத்துக்காட்டிக் கொண்டிருந்தான் இளங்காலைச் சூரிய தரிசனம் அந்த தேயிலை செடிகளின் நடுவில் மெல் ஒளிபட்டு தெறித்து அவள் கன்னங்கள் மினுமினுத்துக் கொண்டிருந்தன.

இரண்டு கைகளிலும் வண்ணங்கள் கூட்டிக் கலக்கிய கண்ணாடி வளையல்கள். வளையல்கள் அழகா? இல்லை அவள் கைகளில் பூட்டியதால் இப்படி அழகாகினவா? விரல்களில் சதைக்கு சற்று முந்தி நிற்கும் வளர்ந்த நகங்கள் இலைகளின் பச்சை நீர் நிறைந்து நகப்பூச்சிக்கு முன்னழகு செய்தது போன்று இரட்டை வண்ணம் காட்டிக்கொண்டு இருந்தது. வலது கையின் நடு விரலில் மாத்திரம் கறுப்பு நிறத்தில் இரும்பினால் ஆன வளையம் ஒன்றினை மோதிரம் என அணிந்திருந்தாள். மார் மறைக்கும் குளியல் குறுக்கை உடுத்தியது போல் அவள் முழுவதுமாய் தேயிலை கொழுந்து களின் நடுவே புத்தாடை போட்டது போன்று இருந்தாள்.

தளிர் களைந்த விரல்களை தன் தளைக்காதுளிரோ என செடிகள் வியந்து கொள்ள அவள் சிட்டுக் குருவி தத்தி நகர்வது போன்று வேகமானாள் பிறந்ததிலிருந்து 19 வருடங்கள் முழுமையாக அவள் ஜீவித்த கொழுந்து காடு அது. அங்கு எல்லாமே அவளுக்கு பழகிப்போனதுதான் இடுப்பு வரை விரிந்து கிடக்கும் கூந்தலை அப்படியே கோர்த்து பழுப்பு நிறத்திலான பழைய பாவாடை ஒன்றை தலையில் போட்டு காதை மறைத்து அதற்குள்ளே கூந்தலையும் சேர்த்து சொருகி முடித்து இருந்தாள். கை விரலின் அழகை ரசிப்பது போல் கால்களை அவ்வளவு சுலபமாய் காண்பது அரிது கொழுந்து கொப்புகளுக்குள் ஒளிந்திருந்ததும் ஒரு காரணம் ஆனாலும் கடினம் மரவேர்களில் மனிதக் குருதியில் அலாதி ஆசை கொண்ட அட்டை குடும்பங்களிடம் இருந்து தப்பித்துக் கொள்ள பாதங்களுக்கு மூடலிட்டு இருந்தாள் அதுவோ கிளிஞ்சல் இல்லாத இடமில்லை.

அவள் மெலிதானவள் என்பதாலோ? இல்லை இவள் மென்மை கருதியோ? அன்றி அவள் வளைவுகளில் நதி மிஞ்சியவள் என்றோ! இவளுக்கு கொடியாள் என்று பெயர் வைத்திருந்தனர். பள்ளிக்கூடம் எல்லாம் கொடியாளுக்கு மூன்று வருடம்தான். அதன் பின்னுக்கு வீட்டுப்பாடம் தான் அன்று பிறந்த நாகு கன்றுக்குட்டியின் கருவிழிகள் விழித்த முளிகள் கலங்காத ஓடைநீரின் உள் வண்ணம் அப்பாடியோ அவள் பேரழகி என்று சொல்வதற்கு அந்த கடை கண்கள் மாத்திரமே சாட்சியாகிவிடும்.

காலை முதல் மாலை வரை கொழுந்து செடியை போர்த்தியே காலம் கழித்துவிடுவாள் மாலை ஆனால் இருளில் ஸ்ஞானம் இவளை முழுவதும் பார்த்து விட சாத்தியம் குறைவுதான்.

இந்த குடம்பிக் கூட்டு புழுவை வண்ணத்துப் பூச்சி ஆகும் என கற்பனை செய்து கண்ணை மட்டும் பார்த்து தன்னை களவு கொடுத்தவன் மறுதீரன். அவன் பட்டணத்தில் படித்தவன். அந்த கொழுந்து சாலையில் உயர்ந்த பதவிக்காரன் கொடியாளை மூன்று வருடமாக செடிகளுக்கு நடுவையும் தொழிற்சாலை முற்றத்தில் மூடிப் போர்த்திய முக்காட்டோடு மாத்திரமேதான் பார்த்திருந்தான். எத்தனை தவம் செய்திருப்பான் வரம் கிடைத்ததே இல்லை பாவம் அவன் தங்குமிடம் கூட அவள் வீட்டு சாலையில் தான். தூரம் ஒன்றும் இல்லை வேலை காரணமா இல்லை இன்னும் வேளை வரவில்லையோ ஒருநாளும் அவன் அவளை இயல்பு பெண்ணின் ஆடையில் முழுவதும் கால், காது என நெற்றியை கூட சரிவர கண்டதே இல்லை. மறுதீரன் அவன் வசதியானவன் அவன் வாட்டசாட்டத்தை திடகாத்திரத்தை இலகுவில் சொல்லி விளக்க முடியாது அவ்வளவு உயரம் கீழ் உதடுகள் வெட்டிப் பிரித்த நதிப் படுக்கை போன்று கோடிட்டு கறுத்திருக்கும் கீழ் பல்லடுக்கில் விலகி நிற்கும் அழகிய தெத்திப்பல் அவன் சிரிப்புக்கு சிங்காரம் செய்து கொண்டிருக்கும். கண்ணிமைகளுக்கு ஏதும் உரம் போட்டு வளர்த்தார்களோ ஒரு படி நீளமாய் வளைந்து மடலுக்குள் மடிந்து அவன் திறந்து மூடும் போது காற்று வீசி கருவிழிகளை குளிர பண்ணிக் கொண்டிருக்கும் போல. அகல தோள்கள் ஆண்மை மிடுக்கில் சறுக்கி அவன் பின் அலைந்து விருப்பம் தெரிவிக்க பல காந்தள் மலர்கள். விண்ணப்பமிட்டிருந்தனர் மருதீரன் நிராகரித்த விண்ணப்பங்கள் எண்ணிக்கை செய்யப்படாதவை. அன்று பக்றியில் பொங்கல் போனஸ் தாராங்கலாம் ஒரு கிலோ கொழுந்துக்கு இரண்டு கிலோ கொழுந்து கணக்கு போடுவாங்களாம். வழக்கமான மூடல்களுடன் கொடியாள் துரிதமானாள். துளிர்களை சேகரித்தாள் அந்த கால் மறைக்கும் பீத்தல் கவசத்தினினுள் ஏதோ ஒரு சரசரப்பு நெழிந்து சுழித்தது. அவளுக்கு தெரிந்து விட்டது இடுப்பு பக்கம் ஒரு உப்பு முடிச்சு கட்டி. எடுத்து பாதணியைக் கழட்டி ஒத்திக்கொடுத்தாள். இரண்டு பெரிய அட்டைகள் காத்தடித்த பலூன் போல அவள் குருதி குடித்து விரிந்து நின்றது உப்புக்காரத்தில களண்டு போக அதை தட்டி விட்டு ஓடின இரத்தத்தில் கொழுந்து இலையை ஒடிச்சு ஒட்டிட்டு மறுபடியும் சப்பாத்த போட்டுட்டு கொழுந்தை கொய்ய ஆயத்தமானாள். பக்கத்தில் நின்ற அவ அம்மா என்ன கொடியா அட்டை கடிச்சு போட்டே மவ... கேட்டுட்டே அவளும் சோலிய பார்க்க வெளிக்கிட்டாள். மாலையில் போனஸ்சயும் வாங்கிட்டு தாயும் பிள்ளையும் விட்ட வன்தனர். வயதான அப்பு கறுத்தமுத்து பாறையில் இருந்து சுருட்ட சுத்திட்டு பழைய ரேடியோபெட்டி விக்கி தக்கி இழுத்துக் கொள்வது போல குக்கி குக்கி புகையை இழுத்துக் கொண்டு இன்றைக்கோ நாளைக்கோ என ஏதோ புலம்பிக் கொண்டிருந்தார்.

தாய் கொழுந்தம்மா மகளை சுடுதண்ணி வை அம்மாமு நான் குளிச்சிட்டு வாரேன் என்றாள்.

கொடியாள் அம்மா கொஞ்சம் இரணை நானும் வாரேன் மேலக் கழுவிட்டு சுடுதண்ணி போடுறன் கால்ல அட்ட கடிச்சது என்று கூடவே போனாள். கொடியாளின் கோவை சிவப்பு மேனி அருவிக்கு தான் சொந்தமோ அது மட்டுமே பார்த்திருக்கும் போல வெள்ளரிப்பிஞ்சுகள் போன்று வழுவழுத்த கால்களில் அட்டை கடித்த காயங்கள். அவசரமாய் அருவியில் சலவையிட்டு சுடுதண்ணி போட வந்தாள். குடிசையும் குசினியும் ஒழுக இல்லாத இடமில்லை அந்த வாரம் மழை தூறல் இல்லை அதுல கூரை நல்லா காஞ்சி காத்துக்கு இறந்த குச்சி சருகுகள் அங்கங்க விழுந்து கொண்டு இருந்தது. இறந்த ஓலை எப்ப காத்துல பறக்க போதோ மனசுக்க நினைத்தபடி கொழுந்து காட்டுக முறிச்சி வந்த விறகுகளை எடுத்து அடுப்ப மூட்டினாள் கொடியாள். அப்புட லைட்ரரை வாங்கி பழைய பொலுத்தீன் பையை அதுல வச்சு அடுப்பை எரிச்சா அது சுவாலை எழும்பி எரிய தொடங்கினதும் தண்ணிய கேற்றில்ல ஊத்தி அடுப்புல வைக்கப்போனாள்.

அம்மாடி ஏன் சொல்ல உள் மனம் இதைத்தான் முன்ன சொன்னதோ என்னவோ கூரை உடைந்து அடுப்புக்குள்ளவிள முடிஞ்ச மரத்தடிகளில் மாட்டி போனாள் கொடியாள். காஞ்சி அலர்ந்த ஓலை பெற்றோலை ஊற்றியது போல் பற்றி எரிந்தது குடிசை முழுக்க எரியுது.

மூடின கிணத்துல மாட்டின தவளையைப் போல கத்தினார் கறுப்புமுத்து ஓடியாங்க ஓடியாங்க அம்மாளு வெளிய வாம்மா அலறினார். அயல் வீட்டுல கண்காணி மறுதீரன் எப்பவும் கொடியாளின் குடிசைய கண்ணு வைப்பது வழக்கம் புகை இந்தப் பக்கம் வருது வேகமாக ஓடி வந்தார் அங்க.

கறுப்புமுத்துக் கத்தி யாரும் வார அளவுக்கு தொண்டையில் சத்தம் இல்லை கொழுந்தம்மா அருவியில குளிச்சிட்டு குடத்துல தண்ணீர் காவி மேல குடிசைக்க வர குடிசை எரியுது பாவி மகள் கொண்டந்த தண்ணிய குடிசையில ஊத்தாம பாறையில தடக்கி அதை போட்டு உடைத்து விட்டு தானும் விழுந்து எழும்பி அலறி குடிசைக்க கொடியாளா? எங்க என்று கறுத்தமுத்தை உலுப்பினாள். ஓடிவந்த மறுதீரன் வாசலுக்க இருந்த குடிசைப்படலையை இழுத்து முறித்து எறிஞ்சிட்டு கொடியா வளை மரத்துக்க மாட்டி கிடந்ததை பார்த்து பதறிப் போய் மூன்றாண்டு பார்வையாள் கருகி மணக்கிறத பாத்துட்டு இருப்பானா ஓடிப்போய் அவளை இழுத்தெடுத்து மண்ணுல போட்டு உருட்டி முற்றத்தில் கிடந்த சாக்கை உதறி அவள சுத்தி தூக்கிட்டு மலைச் சரிவில பாறை உருண்டு போவது போல தேயிலை செடியில மோதி பாறை பள்ளத்துல பாய்ந்து மருத்துவம் பார்க்கிற இடத்திற்கு கொண்டு ஓடினான்.

வாழைத்தண்டு வதங்கி கிடந்தது தொண்டை தண்ணி வற்றி போக ஓர் அனுக்கம் மட்டும் கொடியாளுக்கு....

காற்றுக்கு சூரியனுக்கு காட்டாது ஊட்டி பாதுகாத்த அவள் தழைத் தேகம் வெறுமையாய் மெல்லிய வாழை இலையில் கிடத்தி வெள்ளை மெல்லிய விரிப்பால் மூடப்பட்டுள்ளது. அந்த நிலா வதனம் ஒருபுறம் கருகி மலர்முகம் அழகு முழுவதும் சிதைந்து கோவை இதழ் சீழ் கொண்டிருந்தது.

வேதனை தாங்காது சுடுமண்ணில் விழுந்த பச்சை புழுவென துவண்டு துடித்துக் கொண்டிருந்தாள் கொடியாள். யார் கண் பட்டது அவளை யார் தான் முழுவதும் பார்த்திருக்கிறார்கள். எதையும் காட்டியதே இல்லையே இப்படி தெரிந்திருந்தால் அவளை ஒளிந்து இருந்தாவது ஒருமுறை பார்த்திருப்பேனே முழுவதும் பார்க்க இப்படி மூச்சு இழுக்கும் நேரமா எனக்கு கிடைத்தது....... கன்னிக்கோழியிட்ட தோல் முட்டை போன்று ஆதாரம் அற்று அவதிப்படுகின்றாளே கொடியாள். அங்கலாய்த்துக் கண்ணீர் விட்டு அழுதான் மறுதீரன். அவன் அவளை உயிராய் நேசித்தது உண்மை அவளுக்கு 20 வரட்டும் என்று காத்திருந்தான் இப்போ இருப்பாளோ? எனும் நிலை மறுதீரன் அந்த மருத்துவ அகத்திலே கிடையாய் கிடந்தான். எல்லோருக்கும் ஆச்சரியம் என்ன கங்காணி மேற்பார்வை இங்கேயே காவல் இருக்காங்க யாருக்கும் புரியவில்லை மறுதீரன் மனம். அவள் மான் விழியை மட்டும் பார்த்துத்தானே நேசித்தான் அதை அடிக்கடி பார்த்துக் கொண்டான். அவள் தளிர் விரல்கள் சேதப்படவில்லை அதை அடிக்கடி தொட்டு அவளுக்காக ஒருவர் காத்திருக்கின்றார் என்ற உணர்வை வருடி கொடுத்தான். வேதனையில் எரிவில் கொடியாள் இந்த வருடலை புரிந்தவளாய் கண்ணீர் விட்டாள்.

நான்கு வருடம் ஓடிமறைந்தது நீண்ட நாட்களுக்குப் பின் கொடியாள் அழுது ஓலமிடுகின்றாள்.

அப்பு போன இடத்தை நீயும் போயிட்டியானே கொடியாளின் முகத்தின் ஒருபுறம் பட்டை அகற்றிய வேம்பில் பிசின் வடிந்து இருந்தது போன்று இழுபட்டு திக்கு திக்காக இருந்தது. வாய் கூட ஒரு புறம் இழுபட்டு ஏதோ பசை பூசியது போன்று அப்பி விடப்பட்டிருந்தது. ஒற்றை கண்களில் மட்டும் அதே அழகு மாற்றம் ஒன்றும்இல்லை. நிறைமாத கர்ப்பிணியான கொடியாளை தன் தேக்கு மார்பில் சாய்த்தபடி அவள் நரம்பு புடைத்த கன்னங்களை தன் கைகளால் வருடிக் கொடுத்து அழாதமா நான் இருக்கேன் என்றான் மறுதீரன் அங்கே இரண்டு வயதான மான்குட்டி விழியோடு தோகை முடித்த இரட்டை குடும்பிகளுடன் மறுதீரனின் அருகில் வந்து அப்பா அம்மா ஏன் அழுகுது என்றது. மறுதிரன் குழந்தையை அள்ளி தூக்கி ஒரு புறம் எடுத்துக் கொண்டு மறுபுறம் கொடியாளை ஆறுதல் செய்தான்.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# கணிப்பின் கற்பிதங்கள்...!

மதியத்தை நோக்கி விரையும் இளங்காலைப் பொழுது. நிர்மலமான நீலவானத்தில் மேலைக்காற்றின் தழுவலை உள்வாங்கிய வெண்மேகக் கூட்டங்கள் மெல்ல மெல்ல நகாந்து ஊர்க்கோலம் போய்க் கொண்டிருந்தன. பேரொளியைச் சிந்தும் சூரிய கிரணங்கள் பட்டதால் அந்த வெண்மேகக் கூட்டங்கள் அழகும் ஒளயும் பெற்றனவாய் வெவ்வேறு உருவங்களில் மாறி மாறி சித்துவிளையாட்டு விளையாடிக்கொண்டிருந்தன.

திடீரென ஒரு கருமுகில் எங்கிருந்தோ தம்மை நோக்கி நீந்தி வருவதைக் கண்ட வெண்முகிலொன்று அதனை மேலும் நகரவிடாமல் வழி மறித்தது. அதனை அவதானித்த கருமுகில் ஏய் வெண்முகிலே என்னை ஏன் மறிக்கின்றாய். விலகி வழியை விடு என்றது. என்னவழியை விடவா... நீல வானம் எங்களது இராச்சியம்.

உனக்கு என்ன வேலை இங்கு?

நீயும் உனது முகறக்கட்டையும். இந்தப் பட்டப்பகலில் கூட ஒரு கரும் பிசாசு மாதிரி. சீ....எங்களுக்கு முன்னாலை வந்து நிற்க உனக்கு வெட்கமில்லை...? என கருமுகிலைப் பார்த்து வெண்முகில் ஏளனம் செய்தது. மழையைச் சுமந்து செல்லும் என்னைப்பார்த்து இந்த வெற்றுமுகிலுக்கு எத்தனை ஏளனம் என மனம் நொந்துகொண்ட கருமுகில் தன்னடக்கத்துடன் சரி...சரி..நீதான் வெண்மை... நீதான் அழகு...பரவாயில்லை என்னை மறிக்காமல் முதலில் வழிவிடு என வெண்முகிலைப் பார்த்து பல தடவை கெஞ்சிக் கேட்டது. ஆனாலும் வெண்முகில் தனது திமிர்த்தனத்தை விடுவதாக இல்லை.

இதையெல்லாம் எட்ட இருந்து அவதானித்துக் கொண்டிருந்த கருமுகிலின் தோழர்கள் ஆத்திரமடைந்தனவாய் அவ்விடத்திற்கு ஒன்று திரண்டு விரைந்து வந்து, தனது உரிமைக்காக தனியே நின்று வாதாடிக்கொண்டிருக்கும் அந்த கருமுகிலுடன் இணைந்துகொண்டன. அடுத்த கணமே நீலவானத்தை முற்றாக கௌவியபடி எங்கும் கருமுகிற் கூட்டங்களின் ஆளுகை அரங்கேறியது. அதனை ஆதரிப்பதுபோல ஊதற் காற்றும் பலமாக வீசி வந்தது.

வானத்தில் ஓர் பிரளயம் ஏற்பட்டு விட்டதுபோல சடார்..சடாரென மின்னல்வீச்சுக்கள். அதைத் தொடாந்து பேரிகைமுழக்கம்போல டும்...டும் என பலத்த இடியோசை எழுந்து வானத்தைக் கலக்கியது.

இதை அவதானித்த வெற்று வெண்முகில், கருமுகிலின் பின்னணியை அதன் ஆளுமையை அறியாது. தான் அதனுடன் மோத நினைத்ததை எண்ணி வெட்கப்பட்டதுடன் கலக்கமடைந்து

உடனடியாக அவ்விடத்தைவிட்டு ஓடோடி மறைந்தது. அதைக் கண்ட கருமுகிற்கூட்டங்கள் வெற்றிக்களிப்புடன் மனங்குளிர்ந்து மழையாக பரிணமித்து சோவென்ற சத்தத்துடன் நிலத்தில் விழுந்து புரண்டோடிக் கொண்டிருந்தன.

- செம்மாதுளன் -



# கலைக் கதிர்

# சங்கத்தமிழனின் காதல்

## இலக்கிய நயம்

சங்க இலக்கியங்களை அகம், புறம் என இரு வகைகளாகப் பகுத்திருந்தனர் பழங்காலத் தமிழர்கள் . இத்தகைய பகுப்புமுறைமை வேறு எந்த மொழியிலேயும் இல்லை என்றே சொல்லலாம். அகத்தில் காதலையும் புறத்தில் வீரத்தையும் சிறப்பித்துக் கூறியுள்ளனர். அக்காலத்துப் புலவர்கள் மிகவும் உற்சாகமாகக் காதலைப் பாடி இருப்பதால் சங்க காலத்தில் காதலுக்கு நல்ல வரவேற்பு இருந்தது தெரிகிறது. அதனால்தான் அகம் சார்ந்த பாடல்களே புறம் சார்ந்த பாடல்களைவிடவும் அதிகமாக இருக்கின்றன. எட்டுத் தொகை நூல்களுள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகிய ஐந்தும் அகம் பற்றியவை.

பத்துப்பாட்டு நூல்களுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, ஆகியவை அகநூல்கள் ஆகும். நெடுநல்வாடை அகமா புறமா என்ற பட்டி மன்றம் இன்றும் / இன்னும் நிறைவு பெறவில்லை!



அகம் என்பது உள்ளத்தே நிகழும், வெளியே புலப்படுத்த முடியாத உணர்வை, இன்பத்தைக் குறிப்பதாகும். (உடல் - உறுப்பு இவற்றைவிட உணர்வுகளுக்கே முதன்மை கொடுத்து அகப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன).

அதாவது தலைவன் - தலைவியரின் காதல் வாழ்வையும் மணவாழ்வையும் குறிப்பதாகும். இவற்றில் கூறப்படும் உணர்வுகள் எக்காலத்துக் காதலர்களுக்கும் பொருந்தும் என்பதால் ஒரு சில காட்சிகளைக் காண்போம்.

**இம்மை மாறி மறுமையாகினும்**
**நீயாகி யரெம் கணவனை**
**யானாகியர்நின் நெஞ்சுநேர் பவளே**
**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே**

காதல் வாழ்வில் அவனில் அவளும், அவளுள் அவனும் கலந்து கரைகின்ற தன்மையைக் காட்டும் குறுந்தொகைப் பாடல்கள் இவை:

மழை என்ற தலைவனுக்காக நிலமங்கை காத்திருக்க, மழை வந்ததும் எங்ஙனம் அவற்றை பிரித்து பார்க்க முடியாதோ அதுபோல அன்புடைய நெஞ்சங்கள் ஒன்று கலந்தனவாம். இவ்வழகிய கருத்தைப் பாடிய கவிஞனின் பெயர் தெரியாததால் அவரது கவிதை வரியாலேயே அவர் செம்புலப் பெயல் நீரார் என்று அழைக்கப்படுகிறார்.

**பிளவுபடாத பொருந்திய காதலில் ஒருயிர் ஈருடல் என்ற காதலர்களின் நிலையை,**
**இருதலைப் புள்ளின் ஒருயிரம்மே (அகநானூறு 12)**

**நினக்கு யான் உயிர் பகுத்தன்ன மாண்பினனே**
**(நற்றிணை 128)** பாடல்கள் வழி அறிகிறோம்.

கன்னி மாடத்தில் நின்ற சீதையை அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் முதல் பார்வையிலேயே காதலில் விழுந்ததாகக் கம்பர் பாடுகிறார்.

**ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையல் ஆகும்**
**சீதையின் நடையை நூக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்**
**மாதவள் தானும் அங்கு வந்து நீர் உண்டு மீளும்**
**போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் செய்தாள்**

கம்பனின் காட்சிப் படைப்பு இது. வனவாசம் சென்ற ராமனும் சீதையும் கோதாவரி ஆற்றுக்குப் பக்கத்தில் அமர்ந்து ஒருவர் மற்றொருவரைக் கண்டு மகிழும் காதல் வரிகள் இவை. அன்னத்தின் நடையை சீதையின் ஒய்யார நடையுடன் ஒப்பிட்டு ராமன் சிரிக்க, கம்பீரமாக நடக்கும் யானையின் நடையைத் தன் தலைவனின் நடையுடன் ஒப்பிட்டு மகிழ்கிறாள் சீதை.

பிறன்மனை நயத்தலையும் பரத்தையர் உறவையும் பெருங்குற்றமாகச் சொல்லும் வள்ளுவர் அன்புடைய காமம் சமுதாயத்துக்குத் தேவை என்கிறார்.

காதல் பற்றிய குறள்கள்:

**செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை.**
**மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்**
**செவ்வி தலைப்படு வார்**
**உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு .**
**காதலனை நெஞ்சில் குடிவைத்திருக்கும் காதலி சூடாக எதையும் சாப்பிடுவதில்லையாம். இதை**
**நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்**
**அஞ்சுதும் வேபாக் கறிந்து - குறள்வழி அறிகிறோம்.**

அக மரபின் தொடர்ச்சியாக வருவது பக்தி மரபு . பக்தி என்பது காதலின் ஓர் உன்னத வெளிப்பாடாகும். அன்பினால் இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மா தன்னைப் பெண்ணாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு அன்பு செலுத்தும் நிலை நாயக - நாயகி பாவம் எனப்படும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் நாயக - நாயகி பாவத்தில் பல பாடல்களைப் பாடியுள்ளார்கள்.

தலைவனுடைய பெயரையும் நிலையையும் ஊரையும் கேட்டு, அதைச் சொல்லிச் சொல்லி அவன் மேல் பித்தாகிறாள் தலைவி. தலைவியின் ஒருதலைக் காதலான பக்தியைத் தாய் கூறுவது போல நாவுக்கரசர் பாடியுள்ளார். இதோ அந்த தேவாரப் பாடல்:

**முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்**
**மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்**
**பின்னே அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பேர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை**
**தன்னை மறந்தாள்தன் நாமம் கெட்டாள்**
**தலைப்பட் டாள்நங்கை தலைவன் தாளே**

கோதை என்ற ஆண்டாள் அவளுக்காக செய்யப்பட திருமண ஏற்பாடுகளை மறுத்துத் திருவரங்கம் கோவிலில் உறையும் திருவரங்கனையே தன் மணாளனாக வரித்துக் கொண்டவள். இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு முன் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் நூல்களை எழுதினார். கண்ணனுடன் கொண்ட தோழமை, கண்ணனைப்பற்றிய அவளுடைய கனவுகள் பற்றிய கருத்துகளை இவை விவரிக்கின்றன.

ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம் என்கிறார் பாரதியார்.

காதல் என்ற வார்த்தை காமம் சம்பந்தப்பட்டது, உடல் அவயங்களுடன் தொடர்புடையது என்று உலகம் நினைத்துக் கிடந்த காலத்தில், உண்மையான காதல் என்னும் உணர்வு பரம திருப்தியானது சாதிக்கக் தூண்டுவது என்று பாடுகிறார் பாரதி.

**காதலினால் மானுடர்க்குக் கலவி உண்டாம்**
**கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்**
**காதலினால் மானுடர்க்குக் கவிதை உண்டாம்**
**கானம் உண்டாம் சிற்பம் முதல் கலைகளுண்டாம்**
**ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே**

மேலும் காதல் சாவைக்கூட இனிதாக்கிவிடும் என்கிறார்.

அவர் எழுதிய ‘கண்ணமா என் காதலி’, ‘கண்ணன் என் காதலன்’ ஆகிய கவிதைகள் முழுக்க முழுக்க நாயக - நாயகி பாவனைகள்தான்.

பாரதிதாசன்:காதல் படுத்தும் பாட்டை,

**கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்**
**மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்.**
- என்கிறார்.

இவரின் காதல் பாடல்கள் பல, சமூக சீர்த்திருத்தங்களை வலியுறுத்துகின்றன.

**காதல் அடைதல் உயிரியற்கை - அது**
**கட்டில் அகப்படும் தன்மையதோ - அடி**
**சாதல் அடைவதும் காதலிலே - ஒரு**
**தடங்கல் அடைவதும் ஒன்று கண்டாய்.**


இலக்கிய வானில் காதல் சிறகை விரித்து உயரப் பறந்தவர்கள் தமிழர்கள் என்பது வெள்ளிடை மலை.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்



# யார் அழகு?

ஓரிடத்தில் இருந்த எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந்தன.

ஆனாலும் அவைகளுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன்றும் தன் பெருமையைப் பறைசாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் மௌனமாக இருக்கும்.

"நம் நால்வரில் நான் தான் மிக அழகு! மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்துதான் தோன்றியதாகச் சொல்வார்கள்!" குதித்து குதித்து நடனமாடிய படி சொல்லியது குரங்கு.

"நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்தும் வாழ்கிறோம்! எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே நான்தான் அழகு தேவதை!"" என்றது எலி.

"மனிதர்கள் திட்டும் போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார்கள்! நான் சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்!" பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி.

"நான் இந்த அழகுப் போட்டிக்கே வரவில்லை!" முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்றது.

"என்ன இருந்தாலும் வெள்ளை வெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனிதான்!" குரங்கு சொல்லியது.

"ஆமாம்... ஆமாம்...!" ஒப்புக் கொண்டது வெட்டுக்கிளி.

"நிறமும் அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு, புத்திசாலித்தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொழுது தான் அழகியாக ஏற்றுக் கொள்ள முடியும்" என்றது எலி.

"எனக்கொரு யோசனை தோன்றுகிறது! நமக்குள்ளே ஓர் அழகிப் போட்டி நடத்தினால் என்ன?" கேட்டது வெட்டுக்கிளி.

"போட்டி நடத்தலாம். ஆனால் நடுவர் யார்?" சந்தேகம் எழுப்பியது எலி.

"நடுவராக நானிருக்கிறேன்!" திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. அனைத்தும் மேலே பார்க்க, மரத்தின் மீது ஒரு காகம் இருந்தது.

"நீங்கள் எப்படி?" ஆச்சரியப்பட்டது குரங்கு.

"நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள். ஆனால் நான் தேர்ந்தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்று காகம் தன் முகவரி கூறியது.

"அப்படியே செய்கிறோம்." அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன.

மறுநாள் அனைத்தும் அழகிய அழகுராணி கனவில் மிதந்து காகத்தைத் தேடி போய்க் கொண்டு இருந்தன.

அப்பொழுது குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந்தது. அதன் கால்களில் காயம் தெரிந்தது.

"எனக்கு யாராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒரு சிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!" குருவி பல கீனமாக உதவி கேட்டது.

"நாங்கள் அழகிப் போட்டிக்குப் போய்க் கொண்டு இருக்கிறோம். அபசகுனமாக பேசாதே!" கடுமையாக கூறியது குரங்கு.

குருவியைப் பார்த்த எலியும், வெட்டுக்கிளியும் முகம் திருப்பி சென்று விட்டன. முயல் குருவி அருகே தயங்கி நின்றது. பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக் காலில் வைத்து விட்டு அழகிப்போட்டிக்கு சென்றது.

அழகிப் போட்டி தொடங்கியது. குறித்த நேரத்திற்கு முயல் மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத் தொடங்கின.

"அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண் போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண்கள் கொடுப்பேன்! இதற்குத்தான் அதிக மதிப்பெண்கள் ஒதுக்கி இருக்கிறேன்!" காகம் கூறியதும் குருவிக்கு உதவாத மூன்றும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன.

அப்பொழுது அரக்கப் பரக்க முயல் ஓடி வந்தது.

"முயல்தான் அழகு ராணி! இதை அழகுராணியாகத் தேர்வு செய்வதற்காக நான் பெருமைப் படுகிறேன்! குருவி என் நண்பன்தான்! ஒரு ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன்பு தான் குருவி கூறியது. அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது பற்றியும் சொல்லி வருத்தப்பட்டது! உதவும் நல்ல மனசு உள்ளவர்கள்தான் உண்மையில் அழகானவர்கள்!"" காகம் கூறியதும் எலி, வெட்டுக்கிளி, குரங்கு ஆகியவற்றின் முகங்கள் அஷ்டகோணலாகின.

**நீதி : நாம் யாருக்காவது உதவி செய்தால் அது ஒருநாள் நமக்கு எதிர்பாரத பயனைத்தரும்.**

# அடிப்படை பொது அறிவு தகவல்கள்

1. நாம் கவனம் செலுத்தும் பொருளினின்றும் நம் கவனத்தை வேறு பக்கம் இழுத்து இடையூறு செய்பவை கவனச் சிதைவு ஆகும்.

2. நம் நினைவில் என்றும் தங்கும் வகையில், லொரிகளின் பின்புறத்தில் பொதுவாக எழுதப்பட்டிருக்கும் 'ஒலி எழுப்புக' என்பதற்கு பதில்? - ஒலி எனக்கு (Sound to me)

3. கவனம் - புலன் காட்சிகள் அடிப்படையாகும்.

4. கவனித்தல் நமது மன வாழ்க்கையுடன் எப்போதும் இணைந்து காணப்படுகிறது.

5. ஒருவனுடைய கற்கும்திறன் - உடல் வளர்ச்சிகள் ஒட்டியே அமைகிறது.

6. வளர்ச்சியினைக் குறிக்கும் நடத்தைகளும் செயல்களும் வளர்ச்சிசார் செயல்கள் ஹெலிகாப்டர் என்பவரால் வர்ணிக்கப்பட்டது.

7. முதிர்ச்சியடைந்த ஒருவனின் கவனம் 7 இருக்கும்.

8. கவன மாற்றம் என்பது தொடர்ந்து ஒரு பொருளின் மீது 10 விநாடிகளுக்கு மேல் நாம் கவனம் செலுத்த முடியாது.

9. சில சமயங்களில் நமது கவனத்தைக் கவரும் பொருள்களின் தன்மைகளை - பொருள்கள் காரணிகள்.

10. பிராட்பென்ட் என்பவரது கோட்பாடு - தற்காலச் செய்திக் கோட்பாடுகள்.

11. ADOLESENCE என்ற ஆங்கிலச் சொல்லின் அடிப்படைப் பொருள் என்ன? - வளருதல்

12. ஒப்புடைமை விதி என்பது - குழுவாக எண்ணுதல்.

13. புலன்காட்சியை முறைப்படுத்தும் நியதிகள் எத்தனை? - ஐந்து

14. மனிதனின் புலன் உறுப்புகள் - அறிவின் வாயில்கள்.

15. "உளவியல் என்பது நனவு நிலை பற்றியது" இதனை வலியுறுத்தியவர் - வாட்சன்

16. உளவியல் என்பது மனது பற்றியது என்று கூறியவர் - கான்ட்

17. உளவியல் என்பது ஆன்மா பற்றியது அல்ல என்று கூறியவர் - கான்ட்

18. உளவியல் என்பது மனிதனின் நடத்தை, மனித உறவு முறைகளைப் பற்றியப் படிப்பாகும் எனக் கூறியவர் - ஏ.குரோ, சி.டி.குரோ

19. எவ்விதக் கருவியும் இன்றிப் பிறருடைய நடத்தையை அறிந்துகொள்ள உதவும் முறை - போட்டி முறை

20. நாம் கோபத்தில் இருக்கும்போது நமது முகம் சிவப்பாகிறது, இந்த நடத்தையின் தன்மைகளை அறிய உதவும் முறை - அகநோக்கு முறை.

21. இரண்டு குழந்தைகளில் ஒரு குழந்தை நன்கு தூங்கிய குழந்தை, மற்றொன்று தூங்காத குழந்தை இவர்களின் கற்றலை ஒப்பிடுவதற்கு உதவும் முறை - கட்டுப்படுத்தப்பட்ட உற்று நோக்கல் முறை.

22. வாக்கெடுப்பு எந்த உளவியல் முறையின் ஓர் வகை - வினாவரிசை முறை.

23. பிறப்பிலிருந்து முதுமை வரைக்கும் ஒருவரது கற்றல் அனுபவங்களை விவரிப்பதுதான் கல்வி உளவியல் என்று கூறியவர்- ஏ.குரோ, சி.டி.குரோ.

24. தேர்வு அடைவுச் சோதனையில் நுண்ணறிவின் பங்கைப் பற்றி ஆராய்வதற்காக உதவும் முறை - பரிசோதனை முறை.

25. ஒரு நல்ல சமூக அமைப்புக்கான நுண்ணறிவின் பங்கைப் பற்றி ஆராய்வதற்காக உதவும் முறை - பரிசோதனை முறை.

26. புலன் பயிற்சிக் கல்வி முறையை புகுத்தியவர் - மாண்டிசோரி.

27. டோரனஸ் என்பவர் தந்துவவாதி.

28. தன் நிறைவு தேவை கொள்கையை எடுத்துரைத்தவர் - மாஸ்லோ

29. சாதனை ஊக்கக் கொள்கையை விரிவாக்கியவர் -மெக்லீலாண்ட்

30. சமூக மனவியல் வல்லுநர் - பாவ்லாவ்

31. முன்பருவக் கல்வியுடன் தொடர்பில்லாதவர் - ஜான்டூயி

32. மாஸ்லோவின் தேவைகள் படி நிலைகளுள் முதல்படி எதைக்குறிக்கும் - அடிப்படைத் தேவைகள்.

33. மனநோயை ஹிப்னாடிசம் மூலம் குணப்படுத்தலாம் என்றவர் - ஃபிராய்டு.

34. முதன்முதலில் ஆர்வத்தின் நிலை என்னும் தத்துவத்தை அறிமுகப்படுத்தியவர் - மெக்லிலாண்டு.

35. தேர்வுகள் எதற்காக என்ற எண்ணம் கொண்டவர் - ஏ.எஸ். நீல்

36. குழப்பமான கோட்பாடுடைய புத்தி கூர்மை என்பதைத் தெரிவித்தவர் - தார்ண்டைக்

37. சூழ்நிலை பற்றி ஆராய்ந்த மனநிலை ஆய்வாளர் - டார்வின்


38. மனவெழுச்சி எழுவதற்கான காரணம் என்ன? - மனவெழுச்சி நீட்சி

39. குழந்தைப் பருவத்திலும் முன் பிள்ளைப் பருவத்திலும், மனவெழுச்சிகளில் இருமுகப் போக்கு திசை தோன்றுகிறது.





# தொல்காப்பியர் கூறும் அகத்திணைப் பாகுபாடு



திணை என்றால் என்ன என்பதையும், அகத்திணை, புறத்திணை பிரிக்கப்பட்டதையும் இது விளக்கியுரைக்கிறது.

அகத்திணை வகைகளையும், அகத்திணைக்கு இணையான புறத்திணைகளையும் பற்றிக் கூறுகின்றது.

களவியல் என்பதையும், கற்பியல் என்பதையும் விளக்குகின்றது.

அகத்திணையால் உணரப்படும் பண்டைய பண்பாட்டையும் விளக்குகின்றது.

இதைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

திணைகள் என்றால் என்ன என்பதையும், அகத்திணை, புறத்திணை என்ற பிரிவிற்கான காரணத்தையும் விளங்கிக் கொள்ளலாம்.

அகத்திணையில் உள்ள வகைகளையும், களவியல் கற்பியல் பிரிவுகளையும் விளங்கிக் கொள்ளலாம்.

அகத்திணையால் உணர்த்தப்படும் பண்டைய பண்பாட்டைத் தெரிந்து கொள்ளலாம்.

**முன்னுரை**

2500 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த தொல்காப்பியர், தான் எழுதிய தொல்காப்பிய இலக்கண நூலினை மூன்று அதிகாரங்களாகப் பகுத்தார் என்பதை அறிந்திருப்பீர்கள். எழுத்துகள் பிறந்தது முதல் அவை ஒன்றோடு ஒன்று இணைந்து மொழியாகும் தன்மைகளைக் கூறுவது எழுத்ததிகாரம். இவ்வெழுத்துகள் சொல்லாகி, அச்சொற்கள் அமையும் பாகுபாடுகள், அவற்றின் பெயர் வகைகள் முதலியவற்றைக் கூறுவது சொல்லதிகாரமாகும். இச்சொற்கள் இணைந்து பல்வேறு பொருள்களை உணர்த்தும். இது பொருளதிகாரம் என்று அழைக்கப் பெறுகிறது. பொருள் என்றவுடன் உடனே நாம் உணரும் செய்தி நம் உடைமைப் பொருள்களைத் தான். ஆனால் தொல்காப்பியர் பொருள் என்பதற்கு நம் உடைமைப் பொருளைக் குறிக்கவில்லை. அவர் வாழ்வியல் நிலைகளைக் குறிக்கின்றார். வாழ்வியல் நிலைகளை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றார். இவை பற்றிய விளக்கங்கள் தொல்காப்பியரின் அகத்திணையியலில் வருகின்றன. இவ்வகத்திணை இயல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முதல் இயலாகும்.

**தொல்காப்பியரின் பொருளதிகாரம்**

பொருளதிகாரம் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை,

**1. அகத்திணையியல்**
**2. புறத்திணையியல்**
**3. களவியல்**
**4. கற்பியல்**
**5. பொருளியல்**
**6. மெய்ப்பாட்டியல்**
**7. உவமவியல்**
**8. செய்யுளியல்**
**9. மரபியல்**

என்று ஒன்பது இயல்களாகும். இவற்றுள் அகத்திணையியல் களவியல், கற்பியல் ஆகியவை அகத்திணை பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. பொருளியல் என்பது அகத்திணை பற்றிய செய்திகள் சிலவற்றையும், புறத்திணைக்குரிய செய்திகள் சிலவற்றையும் கூறுகின்றது. மெய்ப்பாட்டியல் எட்டுவகை மெய்ப்பாடுகளைக் கூறுகின்றது. மெய்ப்பாடு என்பது உடம்பில் தோன்றும் உணர்வுகளாகும். உள்ளத்தில் தோன்றிய உணர்வுகள், அவ்வுள்ளத்தில் இருந்து எவ்வாறாவது வெளிப்பட்டு விடும். அதுவே மெய்ப்பாடாகும். உவமையியல் இரண்டு பொருள்களுக்கிடையே காணும் ஒப்புமைத் தன்மைகளைக் கூறுகின்றது. செய்யுளியல் செய்யுள் இலக்கணத்தையும், மரபியல் தமிழில் பழைய காலந்தொட்டு இருந்து வரும் சொற்பொருள் மரபு பற்றியும், முறைமைகள் பற்றியும் கூறுகின்றன.

**தொல்காப்பியர் கூறும் திணைப்பாகுபாடு**

திணைகளை அகம், புறம் என்று பிரித்த தொல்காப்பியர், அகத்திணையை ஏழு பிரிவுகளாகப் பிரிப்பார். அவை

**1. குறிஞ்சி**
**2. முல்லை**
**3. மருதம்**
**4. நெய்தல்**
**5. பாலை**
**6. கைக்கிளை**
**7. பெருந்திணை**

எனப் பெயரிடப்பட்டன. தொல்காப்பிய அகத்திணையியலின் முதல் நூற்பா அகத்திணையைப் பற்றிக் கூறும்போது,

**கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப**

என்கிறது. திணை என்றால் ஒழுக்கம் என்று பொருள்படும். அகமாவது ஓர் ஆணும், ஒரு பெண்ணும் தமக்குள்ளே கண்டு, காதல் கொண்டு ஒன்றுபடுதல், சில காரணங்களால் பிரிதல், பிரிந்து தனித்திருத்தல், அத்தனிமைக்கு இரங்குதல், சில நேரங்களில் பிணக்குக் கொள்ளுதல் என ஐந்துவகை அன்பு உரிப்பொருளைக் கொண்டுள்ளது. இவற்றைக் கூடல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பர். இவை குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் எனவும் குறிப்பிடப்படுகின்றன.

**அன்பின் ஐந்திணை**

ஒருவனும், ஒருத்தியும் தமக்குள்ளே கண்டு காதல் கொள்வது குறிஞ்சித் திணை என்று பெயர் பெறுகிறது. காதலன் பொருளீட்டுவதற்கோ, போர்க்களத்திற்கோ, கல்வி கற்பதற்கோ, தூதுவனாகவோ சென்ற நேரத்தில் பிரிந்து இருக்கும் சூழலில் காதலி காத்திருப்பது முல்லைத் திணை என்னும் பெயர் பெறுகிறது. தலைவனுக்கும், தலைவிக்கும் இடையே பல்வேறு காரணங்களால் பிணக்குகள் வரலாம். இதனை ஊடல் என்று கூறுவர். இந்த ஊடலைக் குறிக்கும் திணை மருதத் திணை எனப்படும். கடலில் மீன் பிடிக்கச் சென்றோ, பிற காரணங்களாலோ தலைவன் பிரிந்து சென்று, திரும்பி வர இயலாத சூழலில் தலைவி அவனுக்காகக் கவலைப்பட்டு இரங்கி நிற்றலை நெய்தல் திணை என்பர்.

தன் ஊரிலே வறட்சியின் காரணமாக வெளியூர் சென்று பொருளீட்டி வரலாம் என்று தலைவன் பிரிந்து செல்லும் நேரத்தில் இல்லத்தில் இருக்கும் தலைவியின் நிலை குறித்து அவன் கவலைப்படுதலும், செல்லும் வழியில் தலைவனுக்கு என்ன நேருமோ என்று தலைவி இல்லத்தில் இருந்து கவலைப்படுதலும் பாலைத் திணை எனப்படும். இவையே அன்பின் ஐந்திணை என்றும் அழைக்கப்படும்.

**கைக்கிளை, பெருந்திணை**

ஆண் விரும்பி, பெண் விரும்பாமலோ அல்லது பெண் விரும்பி, ஆண் விரும்பாமலோ இருப்பின் அது கைக்கிளை. அதாவது ஒரு தலைக் காமம். காதலிக்கும் ஆணைவிடப் பெண் மிகவும் மூத்தவளாகவோ, பெண்ணைவிட ஆண் மிகவும் மூத்தவனாகவோ இருப்பின் அது பெருந்திணை என்று பெயர் பெறும். இது பொருந்தாக் காமம். கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டும் தமிழ்ச் சான்றோர்களால் போற்றப்படாத ஒழுக்கங்களாகும். ஒருவனும் ஒருத்தியும் விரும்புகின்ற ஐந்திணைகள் மட்டுமே அன்பின் ஐந்திணை என்று போற்றப்பட்டது.

**முப்பொருள்கள்**

தொல்காப்பியர் அகத்திணையியலைக் கூறும்போது, அவற்றிற்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை விளக்கியுரைக்கின்றார்.

**முதற்பொருள்**

முதற்பொருள் என்பது உலகம் தோன்றிய காலம் முதல் இருக்கும் நிலமும் பொழுதும் ஆகும்.

**முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே (4)**

என்று தொல்காப்பிய நூற்பா கூறும். நிலத்தைப் பற்றிக் கூறும்போது நிலத்தோடு தொடர்புடைய தெய்வங்களையும் இணைத்துக் கூறுகின்றார்.

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை , குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே**
**(அகத்.5)**

என்றுரைக்கின்றார், தொல்காப்பியர். முல்லை நிலத்தை 'மாயோன் மேய காடுறை உலகம்' என்றார். காடும், காட்டைச் சார்ந்த இடமும் என்று கூறி, அக்காட்டிற்கு உரிய தெய்வமாகத் திருமாலை மாயோன் என்ற பெயரில் குறிப்பிடுகின்றார். குறிஞ்சி நிலத்தை மலையும், மலையைச் சார்ந்த இடமும் என்று கூறி, அம்மலைக்கு உரிய தெய்வமாக முருகனைக் கூறுகிறார். 'வேந்தன் மேய தீம்புனல் உலகம்' எனக் கூறுவது வயலும் வயலைச் சார்ந்த இடமுமாகிய மருத நிலத்தையே ஆகும். இந்திரனுக்கு வேந்தன் என்று பெயரிடப் பட்டுள்ளது. இந்திரனே வயலும் வயலைச் சார்ந்த இடத்திற்குக் கடவுளாகும். 'வருணன் மேய பெருமணல் உலகமும்' என்று கூறுவது மணல் மிகுந்திருக்கக் கூடிய கடலும், கடல் சார்ந்த இடமும் ஆகும். இந்த நிலத்திற்குக் கடவுளாக வருணன் உரைக்கப்படுகிறான். பாலைத் திணை என்பது பாலைவனப் பகுதியாகும். இதற்கான தெய்வத்தைத் தொல்காப்பியர் கூறவில்லை. தமிழ்நாட்டில் பாலைநிலம் இல்லாதது ஒரு காரணமாக இருக்கலாம். பாலை என்ற நிலம் எவ்வாறு உருவாகிறது என்பதைக் காலத்தால் சற்றுப் பிற்பட்ட சிலப்பதிகாரம் தான் சொல்கிறது. முல்லை, குறிஞ்சி ஆகிய நிலங்கள் நீண்ட காலம் மழை பொழியாமல் காய்ந்து போய் இருப்பின் அது பாலை நிலமாக மாறும் என்பதை

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்கு துயர்உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்**
**(காடுகாண் காதை, 64 - 66)**

என்று கூறுகிறது. இப்பாலை நிலத்திற்குக் கடவுள் கொற்றவை எனத், தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இளம்பூரணர் கூறுகிறார். நிலங்களுக்கு இடமும், கடவுளும் கூறிய தொல்காப்பியர் அந்நிலங்களுக்குரிய காதல் ஒழுக்கங்களுக்கு ஏற்ற வண்ணம் பெரும்பொழுது, சிறுபொழுதுகளைக் கூறுகிறார். பெரும்பொழுது என்றால் ஓர் ஆண்டை இரண்டிரண்டு மாதங்களாக - ஆறு பிரிவுகளாகப் பிரித்து அமைத்துக் கொள்வதாகும்.

## கல்விக்கதிர்

- அகரன் -

இவை

**1. கார்காலம்**
**2. கூதிர்காலம்**
**3. முன்பனிக் காலம்**
**4. பின்பனிக் காலம்**
**5. இளவேனிற் காலம்**
**6. முதுவேனிற் காலம்**

என ஆறுவகைப்படும். சிறுபொழுது என்பது ஒரு நாளை ஆறு பிரிவுகளாகப் பிரித்துக் கணக்கிடப்படும் காலமாகும். இது

**1. வைகறை**
**2. விடியல்**
**3. நண்பகல்**
**4. எற்பாடு (பிற்பகல்)**
**5. மாலை**
**6. யாமம் (நள்ளிரவு)**

எனப் பிரிக்கப்படும். (எற்பாடு - எற்பாடாவது பகற்பொழுதின் பிற்கூறு - இளம்பூரணர் உரை, தொல். பொருள். 10)

**கருப்பொருள்**

மேலே குறித்த நிலம் முதலிய இடத்தாலும் காலம் முதலியவற்றாலும் தோற்றம் கொள்ளும் பொருள்களைக் கருப்பொருள் என்று குறிப்பிடுவர். அவை தேவர் என்றும், மக்கள் என்றும், விலங்கு என்றும் பலவாறு பகுக்கப்படும். அங்கு வாழும் மக்கள் உண்ணுகின்ற உணவு, செய்கின்ற தொழில் இவையும் கருப்பொருளாகும். ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வங்கள், உணவு வகைகள், மரங்கள், பறவைகள், செய்தொழில்கள், யாழ் போன்ற இசைக் கருவிகள் எல்லாம் கருப்பொருள் என்பதில் அடங்கும்.

**உரிப்பொருள்**

மக்களுக்கு உரிய பொருள் உரிப்பொருள் எனப்படும். இதனை ஒழுக்கம் என்பர். இது அக வாழ்க்கைக்கும் புறவாழ்க்கைக்கும் உரியது. புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பவற்றோடு கைக்கிளை, பெருந்திணை ஆகியவை சேர்ந்து ஏழும் அகத்திணைக்குரிய உரிப்பொருள்களாகக் கொள்ளப்படும்.

**1. வெட்சி**
**2. வஞ்சி**
**3. உழிஞை**
**4. தும்பை**
**5. வாகை**
**6. காஞ்சி**
**7. பாடாண்**

ஆகிய ஏழும் புறத்திணைக்கு உரியனவாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## எவ்வளவுதான் பதிவிடுவது?

**அங்கம் - 245**

இந்தப் பதிவினைத் தொடங்கிய போது காலிமுகத்திடல் வரை என்று எண்ணி வரையறை செய்தாலும், அதற்குப் பின்னான சம்பவங்கள், வாசகர்களின் கேள்விகளாலும் ஆர்வங்களினாலும் பதியப்பட்டன.

ரணில் ஜனாதிபதியாகி இனப்பிரச்சனைக்கான தீர்வைத் தருவேன் என்று முதற்கட்ட பேச்சை தொடங்கி, அடுத்த கட்டத்திற்கு நாள் வைக்க முன்னரே, பேச்சுக்கு அழைக்கப்பட்ட கூட்டமைப்பு முள்ளந்தண்டு உடைந்து, தமிழரசு கூட்டமைப்பா அல்லது பங்காளிக் கட்சிகள் கூட்டமைப்பா என்ற கேள்விகளோடு நிற்கிறது. வேறு சில கூட்டுக்கள், தலைமைப் பதவிக்கான இழுபறிகள்



எனத் தமிழ் மக்களது அரசியல் தேர்தலுக்காக வடிவங்கள் எடுக்கின்றனவே ஒழிய, மக்களது அன்றாடப் பிரச்சனைகளிலேயோ அல்லது அரசியல் தீர்வை மையப்படுத்தியதாகவோ தெரியவில்லை. இந்த ஓட்டங்களில் எந்த குதிரைகள் வெல்லும் என அவற்றினது நிறை, எடை, ஓட்டுனர் (ஜாக்கி) அவரது திறமைகள், ஓட்டப்பாதையின் தராதரம் பற்றி பதிவுகள் தந்து, ஜோசியமோ, குடுகுடுப்பைச்சாத்திரமோ சொல்லுவதில் ஆர்வம் இல்லை. தமிழ் மக்களும் அதன் அரசியல் தலைவர்களும் மீண்டும் மீண்டும் அதே தவறுகளைத்தான் அறிந்தும் செய்து கொண்டிருக்கிறார்கள். தாங்கள் நினைத்தபடி நடக்க வேண்டும், தாம் விட்டுக் கொடுக்க மாட்டோம் என ஒற்றுமையீனத்தை வளர்ப்பதற்கு எத்தனை கட்சிகள், கூட்டமைப்புகள்?

தேர்தலுக்கும், வாக்குகளில் ஆழம் பார்க்கவும்தான் அவை. அதன் பின் ஒற்றுமையாகி விடுவோம் என்று கூடப் பூச்சுற்றுகிறார்கள். அவர்களை மக்கள்தான் கணிக்க வேண்டும்.

நிகழும் அரசியலின் பலாபலன்களையோ, அவற்றின் விளைவுகளையோ அலசுவதில் தற்சமயம் பின்னிப்பது உசிதம் என்ற எண்ணம்.

காலி முகத்திடலில் கூட தமிழ் மக்களது அரசியல், அவர்களுக்கு நேர்ந்தவை, நடத்தப்பட்டவை பற்றி ஆதங்கங்கள் தெரிவிக்கப்பட்டாலும், அவை அரசியல் ஆதாயங்களுக்காகவும், அதிகாரங்களுக்காகவும் இரும்பு கரங்கள் கொண்டு அடக்கப்பட்டு, பேரினவாதக் கட்சிகள் தமிழ் மக்களின் தீர்வுகளை ஒட்டி இப்பொழுதும் ஓர் அணியிலே நிற்கின்றன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் அப்படியான புரிந்துணர்வு இருந்தும், தமிழ் மக்களிடையே எத்தனை கட்சிகள், தலைவர்கள், அதேசமயம் எத்தனை தீர்வுகள்?

என்னதான் தமிழ் மக்கள் செய்ய வேண்டும் என்ற கேள்வியும், இந்தியா என்னதான் செய்யும் என்ற வினாவும் அடிக்கடி கேட்கப்படுவது உண்டு. அவற்றை சிந்தித்து நான் குழம்புவதும் உண்டு. ஆதங்கப்படுவதும் உண்டு.

நாங்கள் இளைஞர்களாக இருந்த போது, பிரசித்தமான வீதிகளில் சினிமா பாணியில், ஏர் இந்தியா 'கட்டவுட்' வைத்திருக்கும். அதில் 'Go west young man' என்று சுலோகம் மகாராஜா கூறுவது போல் அமையும். தமிழ் மக்கள் எங்கு போவது என நினைத்தபோது இந்த விளம்பரம்.தான் மனதுக்கு வந்தது. வெளிநாடு போவது என்று தியானத்திலேயே இளைஞர்கள் இருப்பதும், அவர்களை எப்படியோ அனுப்பினால் தான் அவர்களும் பிழைத்துத்தாங்களும் பிழைக்கலாம் என்ற மனநிலை பல ஆண்டுகள் தமிழ் மக்களிடையே இருப்பதும்தான். இதுவும் மூடப்பட்ட பாதையாகிவிட்டது என்பதை குறிப்பிட்டு, ஆஸ்திரேலிய கரை நோக்கி வந்த கப்பல்கள் திருப்பப்பட்டமையும், பின் ரியூனியன் சேர்ந்தவை ,அதே நிலைக்கு ஆளாகியமையும் இப்பொழுது, உக்கிரைன் மார்க்கமாக ஆள்களை அகதிகளாக கடத்திய 14 ஸ்ரீலங்கன் தமிழ் பின்னணி கொண்டவர்களுக்கு பிரான்ஸ் சிறைத் தண்டனை விதித்து அந்த மார்க்கங்களையும் அடைத்துள்ளதும் குறிப்பிடத் தக்கவை.



ஆக இளைஞர்கள் தங்கள் அர்ப்பணிப்புகளை அரசியலுக்குத் தந்து, தங்கள் வாழ்வாதார மார்க்கங்களுக்கு அரசியலை முறைப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு ஆளாகிறார்கள். அந்த இளைஞர்களின் பங்கு பற்றலில்தான் எதிர்காலம் தங்கியுள்ளது என உணர்கிறேன்

**இந்திய வெளியுறவு அமைச்சரின் வரவும் சந்திப்புகளும்**

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரின் வரவு தெரியாத ஒன்றை, புதிதாக எதையும் தெரிவிக்கவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அவர்கள் எடுத்த தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்ட 13 ஆம் திருத்தம் முழுமையாக அமலாக்கப்பட வேண்டும் என்பதை மீள அழைத்துச் சொல்லி இருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து ரணில், சம்பந்தனைச் சந்தித்து காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு தருவதற்கான ஏற்பாடுகள் தயாராக்கப்படும் என செய்திகள் வெளிவருகின்றன. தமிழர் தரப்புகளுக்கும் 13க்கு மேல் அப்பாக் சென்ற தீர்வு எதுவாக கூடும் என்ற எந்தப் பேச்சுக்கும் இடம் வைக்கவில்லை.

1987இல் ஒப்பந்தத்தைக் கையெழுத்திட ராஜீவ் காந்தி வந்தபோது அவர் தமிழ் மக்களின் ஆதரவுக்காக வருகிறார் எனப் பார்க்கப்பட்டது. ஜெய்சங்கர் வரவிலோ தமிழ் தரப்புகள் அழைக்கப்பட்டு, அண்ணர் தோரணையில், தீர்வுகளையே பேசிக் கொண்டு வராமல் செய்ய வேண்டியவற்றுக்காக இதனை ஏற்று நடைமுறைப்படுத்துங்கள் என கூறி இருக்கிறார். அந்த தோரணைகள் மூலம் சிங்கள தரப்பும் முழு தீவும் தங்களுக்கு முக்கியமானவை என கோடி காட்டி இருக்கிறார் அவர். தன் கையுடனேயே கொண்டு வந்த பிரதமர் மோடியின் அழைப்பை ஜனாதிபதி ரணிலிக்கு அவர் கையளித்தார். தமிழ் தரப்புக்களை புதுடெல்லியில் சந்திப்பை ஏற்படுத்தி, சந்திக்கலாம் என்றும் மோடியுடன் சந்திப்பு நடக்கும் என்றும் கூற வரவில்லை.



புவியியல் அரசியலில் 2023 ஆம் ஆண்டு நிலைமைகள் வேறு; 1987 நிலைமைகள் வேறு.

அப்பொழுது அமெரிக்கா இந்து சமுத்திரப் பகுதியில் ஸ்ரீலங்கா ஊடாக கால் பதிக்குமோ என்ற பீதி. இப்பொழுது இந்தியா, அமெரிக்காவின் நேச உறவுகளோடு சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த ஸ்ரீலங்காவை முழு தீவாக தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. பெருமாள் தனது பக்தனை காப்பாற்ற பஸ் ஸ்டாண்ட் வந்ததும், பக்தன் 90 ஆம் நம்பர் பஸ்ஸுக்குக் காத்திருக்கிறேன் என்று சொல்லி பெருமாளை அனுப்பிவிட்டு, கடைசியில் 13 ஆம் நம்பர் பஸ்ஸில் ஏறிப் பயணிக்கும் விதி. ஆயின், இழந்ததை, நடந்ததை புலம்பி பயனில்லை. முன்னேற்றத்திற்கான வழிகளை அங்கிருந்து சமைத்தல் வேண்டும். (வளரும்)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.01.2023 இல் வெளியிடப்பெற்றது.